# தி. மு. க. நெருக்கடி தீரும் அறிகுறியில்லை!

பக்கங்கள் 8 விலை சதம் 40

**ஈழநாடு**
The EELA NADU

மலர்: 19 சித்திரை 6 ரபி ஆகிர் 28 இதழ்: 66
ஈழப்பாணம் திங்கட்கிழமை 18-4-77

## நெடுஞ்செழியன் வருங்கால திட்டம்பற்றி 23ல் அறிவிப்பார்

சென்னை, ஏப்ரல் 17

தி. மு. க.வில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வு எதுவும் ஏற்பட்டதாகத் தென்படவில்லை. பதிலாக தி. மு. க. விலிருந்து வெளியேறியுள்ள திரு. இரா. நெடுஞ்செழியனும் மற்றையோரும் தங்களது வருங்காலத்திட்டம்பற்றி இம் மாதம் 23-ம் திகதி அறிவிக்கப்படும் என்று தெரிவித்துள்ளனர்.

திரு. இரா. நெடுஞ்செழியன இன்று விடுத்த அறிக்கை ஒன்றில் சமரசம் பற்றி பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் சம்பந்தமாக கலவரம் அடைய வேண்டாம் என்றும் அமைதியிழக்கவேண்டாம் என்றும் கூறியுள்ளார்.

தி. மு. க. விலிருந்து வெளியேறியுள்ளவர்களின் அடுத்த திட்டம்பற்றி வருகிற சனிக்கிழமை சகலரும் சந்தித்து தீர்மானிக்கப்படும் என்று இரா. நெடுஞ்செழியனின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இது இப்படியிருக்க, தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி இன்று வெளியிட்ட அறிக்கையொன்றில் ராஜினாமாக்களை வாபஸ்பெறுமாறும், மாற்றுஏற்பாடுகள்மேற்கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

கருத்துவேறுபாடுகளை கட்சிக்குள் பேசித்தீர்த்துக்கொள்ளலாம் என்றும் எத்தனை பிரச்னைகள் இருந்தாலும் அவற்றைப் பேசித்தீர்க்க நிறைய வாய்ப்பு இருக்கிறது என்றும் திரு. கருணாநிதி தமது தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

திரு. கருணாநிதியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள 'மாற்று ஏற்பாடு' என்பதன் கருத்து அவரது உள்ளக் கிடக்கையை எடுத்துக்காட்டுகிறது என்று இரா. நெடுஞ்செழியன் கூறியுள்ளார்.

'மாற்றுஏற்பாடு' என்று தாம் குறிப்பிட்டது புதியசெயலாளர் நியமனம் சம்பந்தப்பட்டதில்லை என்று கருணாநிதி, திரு. நெடுஞ்செழியனுக்கு பதிலளிக்கும்வகையில் குறிப்பிட்டுள்ளார்.

இது இப்படியிருக்க, தி. மு. க. விலிருந்து சி. வி. ராஜகோபால் ராஜினாமாச்செய்துள்ளதாக இன்று பிற்பகல் அறிவிக்கப்பட்டது.

(7-ம் பக்கம் பார்க்க)

# காங்கிரஸ் கேட்கும் ஏழு தொகுதிகள்

## கூட்டணி நியமனக்குழுவிடம் வேட்பாளர் பெயரும் கையளிப்பு

**யாழ்ப்பாணம், திங். தமிழ் காங்கிரஸிற்கு வடக்கில ஏழு தொகுதிகள் வழங்கப்படவேண்டும் என தமிழ்க் காங்கிரஸ் கமிட்டி கூட்டணி நியமனக் குழுவிடம் கோரியுள்ளது.**

தமிழ்க் காங்கிரஸ் போட்டியிடவிரும்பு ம்ஏழுதொகுதிகளின் பெயரும், அத்தொகுதிகளில் போட்டியிடவிருக்கும் அபேட்சகர்களின் பெயரும், கூட்டணி நியமனக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கூட்டணி நியமனக் குழுவில் உள்ள தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. எம். சிவசிதம்பரத்தை சந்தித்து, இவ்விஷயமாக வலியுறுத்த தமிழ் காங்கிரஸ் குழுஒன்று கொழும்பு சென்றுள்ளது.

இக்குழு நேநறு திரு. எம். சிவசிதம்பரத்தை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது.

கடந்தவாரம் யாழ்ப்பாணம் வந்த தமிழ்க் காங்கிரஸ்செயலாளர் திரு. தா. சிவசிதம்பரம், காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்களைச் சந்தித்து ஆலோசனை நடத்தியபின், தமிழ் காங்கிரஸிற்கு 7 தொகுதிகள் கோருவதென முடிவு செய்யப்பட்டதாக தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடந்த கூட்டணி நடவடிக்கை குழுக்கூட்டத்தை கூட்டணி நடவடிக்கை குழுவை சேர்ந்த தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்கள் பகிஷ்கரித்ததாகவும் தமிழ் காங்கிரஸிற்கு 3தொகுதிகள் மட்டுமே வழங்கப்படும் என்று கூறப்பட்டதைத் தொடர்ந்து இப்பகிஷ்கரிப்பு நடந்ததாகவும் வெளிவந்த வதந்தி பற்றி இக் கூட்டணிக் கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழ் காங்கிரஸ் நிர்வாகச் செயலாளர் திரு. தா. சுந்தரப்பிள்ளையிடம் கேட்டபோதுதான் ஒன்றரை மணிநேரம் கூட்டத்தில் இருந்து தேர்தல் விஞ்ஞாபனம் உட்பட சகல விஷயங்களிலும் பங்குபற்றி, சுகவீனம் காரணமாக தலைவரின் அனுமதியுடன் வெளியேறியதாகவும் கூறினார். இக்கூட்டத்திற்கு மற்றும் தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினர்கள் சுகவீனம் காரணமாகக் கலந்துகொள்ளவில்லையென்றும் அவர்தெரிவித்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## சுயாட்சிக் கழகம்-கூட்டணி தேர்தல் உடன்பாடு பேச்சு இன்று மாலை முடிவு தெரியும்

வண்ணார்பண்ணை, திங்கள்

தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழர் சுயாட்சிகழகமும் இணையுமா? இதற்கான விடை இன்று மாலை தெரிந்துவிடும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியையும் தமிழர் சுயாட்சிக் கழகத்தையும் இணைக்கும் பேச்சுவார்த்தை இன்று மாலை யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றது.

இப்பேச்சு வார்த்தையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் தமிழர்கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் உட்பட ஐந்து கூட்டணி பிரமுகர்கள் கலந்து

[8ம் பக்கம் பார்க்க]

## கொழும்பில் திருமதி சூ. என். லாய்

கொழும்பு, ஞாயிறு

முன்னாள் சீனப் பிரதமரின் பாரியார் திருமதிசூ-என்-லாய் இன்று கொழும்பு வந்து சேர்ந்தபோது அவருக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. இவரைத் தாங்கிவந்த விசேஷ விமானம் பிற்பகல் 4-30-க்கு கட்டுநாயக்கா வந்து சேர்ந்தது. (ஆ)

## நிபுணர் அளித்த விசேட பேட்டி

மூதறிஞர் செல்வாவிற்கு விசேட சிகிச்சையளிக்க வந்த உலகப் பிரசித்த பெற்ற மூளைநரம்பு சுகிச்சை நிபுணர் பேராசிரியர் வி. இராமமூர்த்தி 'ஈழநாடு' நிருபருக்கு அளித்த 'பிரத்தியேக பேட்டி' நாளை (19-4 77) 'ஈழநாடு' இதழில் வெளிவரும்.

# 3 வாரத்தில் மூதறிஞர் சுகம் பெறுவார்; உலகப்புகழ் நிபுணர் நம்பிக்கை

## அண்ணா, கருணாநிதி மீது பெருமதிப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

**மூதறிஞர் செல்வநாயகத்தின் தற்போதைய உடல்நிலையை உற்று நோக்குமிடத்து இன்னமும் மூன்று அல்லது நான்கு வாரங்களில் அவர் சுகம்பெற்றுவிடுவார் என்ற நம்பிக்கை ஏற்படுகிறதென்று உலகப்பிரசித்திபெற்ற மூளைநரம்பு சிகிச்சை நிபுணர் டாக்டர் வி. ராமமூர்த்தி தெரிவித்தார்.**

தமிழக முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதியின் ஏற்பாட்டின்பேரில நேற்று முற்பகல் விமானமூலம் சென்னையிலிருந்து யாழ்ப்பாணம் வந்த டாக்டர் ராமமூர்த்தி தமிழ்நாடு மக்களுக்கு பெரும்நன்மை பயக்கும் வகையில் சென்னையில் மூளைநரம்பு சிகிச்சை நிலையத்தை உருவாக்கியபெருமை பேரறிஞர் அண்ணாவுக்கும், கலைஞர் மு. கருணாநிதிக்குமே உரியது' என்று தெரிவித்தார்.

### அண்ணா, கலைஞர்மீது மதிப்பு

பேரறிஞர் அண்ணாமீதும் கலைஞர் கருணாநிதிமீதும் தாம் மிகுந்த மதிப்பு வைத்திருப்பதாக டாக்டர் ராமமூர்த்தி தெரிவித்தார்.

மூதறிஞர் செல்வாவின் தற்போதைய உடல்நிலையை அவதானிக்கையில் தற்போதைய சிகிச்சைமுறைகளைத்தொடர்ந்தும் அவருக்கு அளித்துவந்தால் மூன்று நான்கு வாரங்களில் சுகம் கிடைத்துவிடும் என்று டாக்டர்ராமமூர்த்திநம்பிக்கை தெரிவித்தார்.

மூதறிஞரின் சுவாசப்பை, சிறுநீரகம் என்பன திருப்திகாமாக இயங்குவதால் அவர்சுகம் பெறுவது குறிப்பிட்ட காலங்களுக்குள சாத்தியமாகும் என்றும் அவர் சொன்னார்.

மூதறிஞருக்கு யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை முறைகளையும் பராமரிப்பையும் வெகுவாகப் பாராட்டிய டாக்டர் ராமமூர்த்தி தொடர்ந்தும் இதே சிகிச்சை முறைகள் தொடர வேண்டும் என்றும் சொன்னார்.

டாக்டர் ராமமூர்த்தியை மூதறிஞரின் புதல்வர் சந்திரகாசனும் மற்றும் கூட்டணி பிரமுகர்களும் பலாலி விமானநிலையத்திற்குச் சென்று வரவேற்று யாழ். பெரியாஸ்பத்திரிக்கு அழைத்துவந்தனர்.

டாக்டர் ராமமூர்த்தி இன்று காலை விமான மூலம் சென்னை திரும்புவார். (உ)

### செல்வா நிலைமை

## வைத்திய சுப்பிரின்டன் வெளியிட்ட அறிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

மூதறிஞர் செல்வாவிற்கு தற்போதைய சிகிச்சையும், கண்காணிப்பும் தொடர்ந்து இருந்துவரும் பட்சத்திலும், புதிய சிக்கல்கள் ஏதும் தோன்றாதவிடத்தும், இன்னும் சில வாரகாலத்தில், அவர் திருப்திகரமானமுறையில் சுகம் பெறுவார்.

மூதறிர் செல்வாவை பரிசோதித்த உலகப் பிரசித்தி பெற்ற மூளை நரம்பு சிகிச்சை நிபுணர் திரு. பி இராமமூர்த்தி தெரிவித்துள்ளதாக யாழ். பெரியாஸ்பத்திரி வைத்திய அதிகாரி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்

(7-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பத்தம்புதிய றலி ஸ்ப்போட் சயிக்கிள் கியர், கப்பிறேக் உள்ளது. தற்சமயம் சிங்கப்பூரிலிருந்து இங்கு கொண்டுவரப் பட்டது. நேரில் வரவும். டாக்டர் இ. சோமசுந்தரம், 108, கோவில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 5917

## பயிற்சி

வெளிநாடுகளில் எமது சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. வெல்டிங் Electric Arc & Gas (மூன்று மாதம்) இலெக்றிக் வயறிங் (மூன்று மாதம்) ரேடியோ Transistor Technology (ஆறுமாதம்) ஒரே கட்டிடத்தில் Theory & Practicals. ஆங்கிலப் படிப்பு இலவசம். எமது NIET டிப்ளோமா பெற்ற பலர் வெளிநாடுகளில் வேலை பார்க்கிறார்கள். National Institute of Engineering Technology மைற் மண்டபம், 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 5929

## தவறிவிட்டது

17-4-77-ந் திகதி காலை 5-30-6-30 மணிக்கிடையில் சைக்கிளில் பிரயாணம் செய்யும்பொழுது ஒரு சோடிக் காப்பு (2 பவுண் நிறை) காசு ரூபா 800/- எனது பெயர் எழுதிய என்வலப்பில் இருந்து பூநாறிமரத்தடிக்கும், பஸ் நிலையத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் M. A. C. மொகிடீன், 74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் ஒப்படைத்தால் மிகச் சிறந்த சன்மானம் வழங்கப்படும். 5945

## தேவை

சேலை அச்சடிக்கப் (Textile Printing) பழகி வேலை செய்வதற்கு பெண்பிள்ளைகள் உடனடியாகத் தேவை. நிலையத்துக்கு அண்மையிலிருப்பவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும். பயிற்சிக்காலத்திலும் வேதனம் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும். வசந்தா ரெக்ஸ்ரயில்ஸ், 42, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். 5943

## பிலிப்நேரிஸ் வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள்

பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் தாளையடி விளையாட்டுக் கழகத்திற்கும், செம்பியன்பற்று சென்பிலிப்நேரிஸ் விளையாட்டுக்கழகத்திற்கும் இடையே நடைபெற்றபோட்டியில் சென் பிலிப்நேரிஸ் விளையாட்டுக்கழகம் 2 கோல்களால் வெற்றியீட்டியது.

இப்போட்டிகடந்த 9-ம்திகதி நடைபெற்றது. தாளையடியில் உள்ள இந்த இரண்டு விளையாட்டுக்கழகத்திலும் உள்ள சிறந்த வீரர்கள் இப்போட்டியில் விளையாடினர். (அ)

## சாம்பியன்

சுழிபுரம், ஞாயிறு

வலிகாமம் மேற்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் எல்லைக்குட்பட்ட கரபந்தாட்ட கழகங்களுக்கிடையே நடைபெற்றபோட்டியில் அராலி கில்வஸ்ரார் கோஷ்டி சாம்பியனாகத் தெரிவு செய்யப் பட்டது. பத்து விளையாட்டுக் கழகங்கள் போட்டியில் பங்குகொண்டன பழையமுறையிலான இவ்விறுதி ஆட்டத்தில் அராலி கில்வஸ்ரார் கோஷ்டியினரும் வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழகத்தினரும் மோதிக் கொண்டன. போட்டி சங்கானை பொலிஸ் விளையாட்டு மைதானத்தில்நடைபெற்றது. (அ)


கராட்டி — KARATE

சோட்டக்கான் கராட்டிச் சங்கம் (பதிவு இல. 7)
(அகில இலங்கை கராட்டி ஒன்றியத்தின் அங்கீகாரம் பெற்றது)

வட இலங்கையில் முதன் முதலாக கராட்டியில் கறுப்புப்பட்டி பெற்றவரும், அகில இலங்கை கராட்டிப் போட்டிகளில் பல தங்க வெள்ளிப் பதக்கங்களை வென்றவரும், அங்கீகாரம் பெற்ற நடுவரும், பல வருடங்களாக பயிற்சி நெறியாளராக பூரண அனுபவம் பெற்ற

இலங்கை — இந்தியப் புகழ்
மாஸ்டர் S. R. சந்திரக்குமார்
(கறுப்புப்பட்டி — SHODAN)

அவர்களின் தலைமையின் கீழ் புதிய பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

இடம்: திவ்வியஜீவன சங்கம் நல்லூர். | இடம்: Y. M. H. A. (இளம் இந்து வாலிபர் ஒன்றியம்) திருநெல்வேலி.

நேரம்: மாலை 5-30 மணி | நேரம்: காலை 9-00 மணி

நாள்: செவ்வாய்க்கிழமை சனிக்கிழமை | நாள்: புதன்கிழமை சனிக்கிழமை

அத்துடன் கிழைத்தேச போர்க்கலைகளான ஜீடோ, நன்ஷாக்கு, சன்ஜி, சீனச்சிலம்பு முதலியன பயிலுங்கள்.

முக்கிய குறிப்பு: பெண்களுக்கும் ஆண்களுக்கும் தனித்தனியே வகுப்புகள் நடத்தப்படும். வயது, பால், நிறை, உயரம், தோற்றம் போன்ற கட்டுப்பாடுகள் கிடையாது. மேலதிக விபரங்களுக்கு:

P. ராகவன் (அமைப்பாளர்)
62, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
தவராசா
Y. M. H. A. திருநெல்வேலி. 5900


## மரண அறிவித்தல்

### இராசம்மா செல்லையா

இராசம்மா செல்லையா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற இவர்மலாயன் பென்சனியர் வைத்திலிங்கம் செல்லையா அவர்களின் பாரியாரும், காலஞ்சென்ற நடராசா, ஜீவராசா ஆகியோரின் தாயாரும், குணவதி, பரமேஸ்வரி ஆகியோரின் மாமியாரும், சோமஸ்கந்தன், சாந்தகுமார், ஜெயகுமார், செல்வநாயகம், கமலாதேவி, ஸ்ரீஸ்காந்தி ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். 28, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 5944

## மகாராஷ்டிர முதல்மந்திரி

புதுடில்லி, ஏப்ரல் 17

மகாராஷ்டிரமாநில அரசின் முதல் மந்திரி எஸ். பி. சவான் தமது பதவியை ராஜினாமாச் செய்ததனையடுத்து அப்பதவிக்கு வசந்தபாய்பட்டேல் நியமிக்கப் பட்டுள்ளார். (உ)

மரணசாதன உரிமைத் தத்துவப் பத்திரங்கள் வழங்குவதற்கு 283-ம் பிரிவின் கீழ்

## இடைக்காலக் கட்டளை

### இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

கோப்பாய், கோப்பாய் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சரவணமுத்து வேலாயுதரின் மரணசாதனம் எழுதப்படாத சொத்து சம்பந்தப்பட்ட வழக்கில்

காலஞ்சென்றவர்

வலயம்: யாழ்ப்பாணம்
இலக்கம்: 326

கோப்பாய், கோப்பாய் வடக்கு சரவணமுத்து வேலாயுதர்கைம்பெண் தெய்வேந்திரராணி.

விண்ணப்பகாரர்

மற்றும்

1. கோப்பாய் வடக்கு, வேலாயுதர் பவானி
2. கோப்பாய் வடக்கு வேலாயுதர் சாந்தினி
3. கோப்பாய் வடக்கு வேலாயுதர் யசோதினி
4. கோப்பாய் வடக்கு வேலாயுதர் சிவகுமார்
5. கோப்பாய் வடக்கு வேலாயுதர் நந்தினி
6. கோப்பாய் வடக்கு வேலாயுதர் பாமினி

மேற்படி 1-ம், 6-ம் வரைக்குமுள்ள பிரதிவாதிகளின் பாதுகாவலராக 7-ம் பிரதிவாதி நியமிக்கப் பட்டுள்ளார்.

7. கைதடி வடக்கு சரவணமுத்து இராசையா

பிரதிவாதிகள்

281-ம் பிரிவின் கீழ் 1977-02-08-ந் திகதி செய்யப்பட்ட விண்ணப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்தில் சந்தேகத்திடமின்றி நிரூபிக்கப்பட்டதென திருப்தியுற்று யாழ்ப்பாண நீதித்துறை வலய மரணசாதன உரிமைத் தத்துவ அலுவலர் கே. கணபதிப்பிள்ளை ஆகிய நான் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி எந்தவொரு நபராவது 1977-04 27-ந் திகதி அல்லது அதற்கு முன் ஆட்சேபம் காட்டினாலன்றி

(அ) மேற்கூறப்பட்ட விண்ணப்பகாரர் குறித்த காலஞ்சென்றவரின் கைம்பெண் என்ற முறையில் அவரின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்களின் மீதான உரிமைத் தத்துவப் பத்திரத்தை பெறுவதற்கு உரித்துடையவரென்றும், அவ்வண்ணம் அவருக்கு வழங்கப்படுமென்றும்

(ஆ) இவ்வழக்கு சம்பந்தமாக பராயமற்ற 1-ம், 6-ம் வரைக்குமுள்ள பிரதிவாதிகளின் பாதுகாவலராக 7-ம் பிரதிவாதி நியமிக்கப்படுவாரென்றும் இத்தால் கட்டளையிடுகிறேன்.

1977-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8-ந் திகதி.

கே. கணபதிப்பிள்ளை,
மரணசாதன
உரிமைத் தத்துவ அலுவலர். 5940

## கேள்வி விளம்பரம் 1977/78

அராலி கிராம சபை 1977/78ம் ஆண்டுக்கான றோட்டு வேலைகளுக்கான கல், மக்கி, ஊரி ஆகிய பொருட்களை வழங்கும் ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விகளைக் கோருகின்றது. கேள்விகளை அனுப்பவிரும்புவோர் இதற்கான கேள்விப் பத்திரத்தை ரூபா 50/- கேள்வி வைப்புப் பணமாகவும் ரூபா 15/- கேள்விப் பத்திரப் பணமாகவும் செலுத்தி 18-04-77 முதல் 28-04-77 பி. ப. 3 மணிவரை அராலி கிராம சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் யாவும் பதிவுத்தபாலில் தலைவர், அராலி கிராம சபை, அராலி, வட்டுக்கோட்டை என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். குறைந்த கேள்விக்காரர்களது கேள்விகள் யாவும் இத்திகதியில் இருந்து 12 மாத காலத்துக்கு செல்லுபடியானதாக வைக்கப்படும். அக்கால எல்லையில் சபை அனுப்பும் கட்டளைகளுக்கு கட்டளைத் திகதியில் இருந்து ஒரு மாத காலத்தில் கட்டளைப் பொருட்களின் ஒரு பகுதியை மட்டுமோ அல்லது முழுமையுமோ வழங்க வேண்டும். இதற்கான ஒரு ஒப்பந்தமும் செய்துகொள்ளப் படும்.

இ. நாகலிங்கம்,
தலைவர்,
அராலிக் கிராமசபை.

கிராம சபை அலுவலகம்,
அராலி, வட்டுக்கோட்டை.
77-04-15. 5939

## பிஸ்கால் விற்பனை

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

குமாரசிங்கம் அருளம்பலம், ஆனைக்கோட்டை, மானிப்பாய் — வழக்காளி

வழ. இல. - எம். எஸ். 5390

எதிர்

1. சுப்பையா கதிர்காமத் தம்பியும்,
2. பெண் பாக்கியரத்தினமும், இருவரும், "இராயஸ்தான்", மானிப்பாய். — எதிராளிகள்

மேற்சொல்லப்பட்ட எதிராளிகளிடமிருந்து ரூபா 6500-ம் 9-3-75 தொடக்கம் கடன் இறுக்கும் வரைக்கும் கோட்டு வட்டியும், பிஸ்கால் செலவும், பவுண்டேச்சும் அறவாக்குவதற்காக கீழே விபரிக்கப்படும் ஆதனங்களின் உரித்துக்களை 1977-ம் ஆண்டு வைகாசி மாதம் 18-ம் திகதி புதன்கிழமை காலை 10-00 மணிக்கு சொல்லப்பட்ட ஆதனங்களில் இருந்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

### ஆதன இடாப்புக்கள்

வட்டுக்கோட்டை கிழக்கு ஆனைவிழுந்தான் இறை, வட்டுக்கோட்டை கோவிற்பற்று வலிகாமம் மேற்குப் பகுதி, யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணம்.

(அ) 'திந்தசட்டி' நிலப்பரப்பு 20, கொட்டிலும், சேர்மான்களும், எல்லை வடக்கு செல்லப்பா ஏகாம்பரத்தின் காணி, கிழக்கு: கை ஒழுங்கையும் இளையவன் மாணிக்கத்தின் காணியும், தெற்கு றோட்டு, மேற்கு: கதிரேசமகள் சிவபாக்கியத்திற்கும் மறுபேரின் காணி.

(ஆ) ஷைவளவு 'பெத்தாச்சி வளவு' நிலப்பரப்பு 3¼ கிணறும், சேர்மான்களும் எல்லை கிழக்கும், வடக்கும்: கைஒழுங்கை, தெற்கு: கந்தையா சுப்பிரமணியத்தின் காணி, மேற்கு: பொன்னம்பலம் முத்தம்மாவின் காணி.

மூ. பத்மநாதன்
பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.
15-04-77 5934

## ச ச நிலைய ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

ஆனைக்கோட்டை அம்பாள் சனசமூகநிலையத்தின் 8 வது ஆண்டு நிறைவு விழா இம்மாதம் 20ம் திகதி புதன்கிழமை நடைபெறுகிறது. பகல் நிகழ்ச்சிகளாக விளையாட்டுப்போட்டிகளும் தாச்சிசுற்றுப்போட்டியின் சம்பியன் தெரிவும் பரிசளிப்பும் இடம்பெறும்.

இரவு நிகழ்ச்சிகளாக சொற்பொழிவு, நாதஸ்வர இசை, வில்லிசை, மெல்லிசை, நாடகங்கள் நடைபெறும். (அ)

## 76ம் ஆண்டுக்கான சன்மானம்

சுழிபுரம், ஞாயிறு

பாடசாலைகளுக்குப் புறம்பான சமயவகுப்புக்களை நடாத்தும் சமய நிறுவனங்கள், சங்கங்கள் ஆகியவற்றுக்கு சென்ற ஆண்டுக்குரிய நன்கொடையாக ரூபாய் ஐம்பது மட்டும் கலாசார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான வவுச்சர்கள் சம்பந்தப்பட்ட இயக்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன காசோலைகள் விரைவாக அனுப்பப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது இவ்வாண்டுக்கான நன்கொடைப்பணம் பெறும் விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 30ம் திகதியென அறிவிக்கப் பட்டுள்ளது. (அ)

## விளையாட்டு விழா

நல்லூர், ஞாயிறு

விளையாட்டுத்துறை அமைச்சின் யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவிலமைந்துள்ள சனசமூகநிலையங்கள் விளையாட்டுக்கழகங்கள் ஆகியவற்றிடையிலான விளையாட்டு விழா இம்மாதம் 22, 23, 24ம் திகதிகளில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன,

இவ்விழாவில் கரபந்தாட்டப்போட்டி, உதைபந்தாட்ட கனிஷ்ட, சிரேஷ்ட போட்டிகள் வலைபந்தாட்ட போட்டி மெய்வல்லுநர்போட்டி ஆகியன இடம்பெறும்.

விளையாட்டு விழா ஏற்பாடுகளை விளையாட்டதிகாரி திரு. ரி. நடராசா கவனித்து வருகிறார்'

## சாம்பியன் மோதல்

நல்லூர்' ஞாயிறு

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலமைந்துள்ள சனசமூக நிலையங்கள், விளையாட்டுக்கழகங்கள் ஆகியவற்றுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணம் ரோஜு ஸ்தாபன வெற்றிக் கேடயத்திற்கான சாம்பியன் மோதலில் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழக 'ஏ' பிரிவுக் கோஷ்டியும் 'பி' பிரிவுக் கோஷ்டியும் எதிர்வரும் 24-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் மோதுகின்றன.

# தி. மு. கழகத்திலிருந்து வெளியேறியவர்கள் 'ஜனநாயகத்தைக்காக்க' புதியகட்சி

## மாஜி சட்ட அமைச்சர் மாதவன் அறிவிப்பு: பா.உ. சண்முகத்தின் ராஜினாமா வாபஸ்

சென்னை, ஏப். 17

கடந்த லோகசபைத் தேர்தலில் தி. மு. க. வுக்கு ஏற்பட்ட தோல்விக்குப் பரிகாரம்காண தாம் தெரிவித்திருந்த கருத்துக்களை கழகத் தலைமைப்பீடம் ஏற்றுக்கொள்ள மறுத்ததினலேயே தாமும் மற்றும் நால்வரும் தி. மு. க.விலிருந்து ராஜினமாச் செய்துள்ளதாக முன்னள் அமைச்சர் திரு. கே. ராஜாராம் தெரிவித்தார்.

### தவருன கூற்று

தி. மு. க. தலைமைப்பதவி ஆசை தான் தமது ராஜினமாவுக்கு காரணம் என்று கூறப்படுவது தவருனது என்றும், கொள்கை ரீதியிலேயே தாம் ராஜினமாச் செய்துள்ளதாகவும் அவர் கூறினர்.

தம்மை மீண்டும் கழகத்தில் சேர்க்க முன்னள் அமைச்சர்களான திருவாளர்கள் சாதிக் பாஷா, அன்பழகன் ஆகியோர் சமரச முயற்சிகளை மேற்கொண்டதாகவும் தாம் மீண்டும் சேர்வது பற்றி எதுவும் இப்போது கூறுவதற்கில்லை என்றும் அவர் கூறினர்.

### மாதவன் புதிய கட்சி அறிவிப்பு

ஜனநாயகத்தைப்பாதுகாக்க தாம் புதிய கட்சி ஆரம்பிக்க உள்ளதாகவும் புதிய கட்சி அமைக்கும் முடிவில் எதுவித மாற்றமும்இல்லை என்றும் ராஜினமாச் செய்தவர்களில் ஒருவரான மற்றெருரு முன்னள் அமைச்சர் திரு. எஸ் மாதவன் தெரிவித்தார்.

தி. மு. க. அமைச்சரவையில் சட்ட மந்திரியாக இருந்த திரு. மாதவன், திரு. கருணநிதியின் மிகநெருங்கிய நண்பராகஇருந்தவர். திரு. கருணநிதி வெளிநாடு சென்றபோதுகூட திரு. மாதவனையே தம்முடன் அழைத்துச் சென்றிருந்தார்.

இதேவேளை இவர்களினது ராஜினமாக் கடிதங்கள் தமக்குக்கிடைக்கவில்லை என்று தி. மு. க. தலைவர் திரு. கருணநிதி கூறினர்.

### பொதுக் குழு கூடுகிறது

திட்டமிட்டபடி தி. மு. க. பொதுக்குழு இம்மாதம் 24ம் திகதி தஞ்சாவூரில்கூடும் என்றும் பொதுச்செயலாளர் இரா நெடுஞ்செழியனதும் மற்றும் மூன்று முன்னள் அமைச்சர்களினதும் ராஜினமா பற்றி அக்கூட்டத்தில் ஆராயப்படும் என்றும் திரு. கருணநிதி கூறினர்.

### சண்முகம் ராஜினமா வாபஸ்

திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து ராஜினமாச் செய்த முன்னள் மாநில அமைச்சர் திரு. பா. உ. சண்முகம் தமது ராஜினமாவை வாபஸ்பெற்றுவிட்டார் என்று தி. மு. க. தலைமைப்பீடத்தின் பிந்திக்கிடைத்தசெய்தி ஒன்று தெரிவிக்கிறது.

தமது வாபஸ் கடிதத்தை அவர் தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணநிதிக்கு அனுப்பிவைத்துள்ளார் என்றும் தி. மு. க. தலைமைப்பீடம் மேலும் தெரிவித்தது. (இ-உ)

## ஜோர்தான் மன்னர் கார்ட்டரை சந்திப்பார்

அம்மான், ஏப். 17

ஜோர்தான் மன்னர் ஹுசெய்ன் அமெரிக்காவுக்கும் ஜேராப்பிய நாடுகளுக்கும் விஜயம் ஒன்றினை மேற்கொண்டுள்ளார்

தமது விஜயத்தின்போது மன்னர் அமெரிக்க ஜனதிபதி திரு. ஜிம்மிகார்ட்டரையும், ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடாத்துவரர்.

இப்பேச்சுவார்த்தைகளின்போது மத்தியகிழக்குப்பிரச்னை முக்கிய இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ)

## சிரியாஜனதிபதி ரஷ்யாவில்

லண்டன், ஏப். 17

சிரியா ஜனதிபதி சோவியத் யூனியனுக்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டுள்ளார்.

அவர் மாஸ்கோவில் சோவியத் தலைவர்களைச் சந்தித்து மத்தியகிழக்குப் பிரச்னை மற்றும் இருநாடுகளுக்கும் இடையிடையேயான பொருளாதார—இராணுவ உதவிகள் பற்றியும் உரையாற்றுவர். (உ)

## கடத்தல் பொருட்கள் கிடைக்கவில்லை

மாவிட்டபுரம், ஞாயிறு

சேந்தாங்குளம் கடற்கரையில் கடத்தல்முயற்சி ஒன்றை முறியடிப்பதற்காக விரைந்த காங்கேசன்துறைப் பொலிசாரிடம் கடத்தல் பொருட்கள் அகப்படவில்லை. ஆனல் கடத்தலுக்கு உபயோகிக்கப்பட்டதாகக் கருதப்படும் இயந்திரப் படகு ஒன்று அகப்பட்டுக்கொண்டது.

கீரிமலையையடுத்த சேந்தாங்குளம் கடற்கரையில் இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்ட பொருட்களுடன் ஒரு இந்தியப் படகு நிற்பதாகக் கிடைத்த தகவலின் பேரில் அங்குவிரைந்த காங்கேசன்துறைப் பொலிசார் கடத்தல் பொருட்களை கைப்பற்ற முடியவில்லை,

இதையடுத்து அங்கு நின்ற இக்கடத்தலுக்கு உபயோகிக்கப் பட்டதாகக் கருதப்படும் இந்தியப்படகொன்றை அவர்கள் கைப்பற்றினர்.

கடத்தல் பொருட்களையும், கடத்தல்காரர்களையும் தேடி பொலிசார் தேடுதல் வேட்டையிலிறங்கியுள்ளார்கள். (அ)

## பிரி. தூதர் பாராட்டு

நெல்லியடி, ஞாயிறு

அண்மையில் வடபகுதிக்கு விஜயஞ்செய்த பிரித்தானியத் தூதுவர் திரு. டேவிட் அயர்ஸ் உடுப்பிட்டித் தொகுதிப் பிரதேச அபிவிருத்திச் சபையால் உற்பத்தி செய்யப்படும் சப்பாத்துத்தொழிற்சாலைக்கு விஜயஞ் செய்தார்.

திரு. டேவிட் அயர்ஸை சபையின் தலைவரும், வடமராட்சி தெற்கு மேற்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபருமான திரு. வி. வேலும்மயிலும் பிரதேச அபிவிருத்தி அலுவலர் திரு. ரி. அரியரத்தினம் ஆகியோர் வரவேற்றனர்.

இங்கு உற்பத்தி செய்யப்படும் சப்பாத்து வகைகளின் தரத்தைப் பாராட்டிய திரு. டேவிட் அயர்ஸ் மேலும் பல தொழில்நுட்ப உதவிகளைப் பெறுவதனல் இத்தொழிலை மேலும் வளர்ச்சிபெறக்கூடிய வாய்ப்பு இருப்பதாகக் கூறினர். (அ)

## 14 கோடி மக்கள் சம்பளமின்றி பணியாற்றினா

மாஸ்கோ, ஏப். 17

சோவியத் யூனியனில் நேற்று 14 கோடி தொழிலாளர்கள் சம்பளமின்றி வேலை செய்தனர் என்று ரஷ்ய செய்திஒன்று தெரிவித்தது.

சோவியத் அக்டோபர் புரட்சி, லெனின் பிறந்த தினம் ஆகியவற்றை நினைவு கூருமுகமாகவே இவர்கள் சம்பளமின்றி பணியாற்றினர்' (இ)

லிபியாவில்

## 45 அதிகாரிகளுக்கு மரண தண்டனை?

கெய்ரோ, ஏப்ரல் 17

லிபியாவில் சமீபத்தில் 45 அதிகாரிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது என்று கெய்ரோ அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

எகிப்துக்கும், லிபியாவுக்கும் மத்தியில் உருவான நெருக்கடி நிலையின் எதிரொலியே இது என்றுஅவ்வறிக்கைகள் மேலும் கூறின.

இந்நெருக்கடிநிலை உருவாவதற்குக் காரணமேலிபியாதான் என்றும் எகிப்துகுற்றஞ்சாட்டியுள்ளது. (உ)

## வேலையற்றோர் பிரச்னை தீர பிரான்ஸ் புதிய திட்டம்

பாரிஸ், ஏப். 17

அடுத்தாண்டு நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலுக்கு முன்பதாக நாட்டில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைஒழிப்பதற்குபிரான்ஸ்புதிய நடவடிக்கைகளை அமுல்செய்யவிருக்கிறது.

இதன் அடிப்படையில் பிரான்ஸ் பிரதம மந்திரி அடுத்த பத்து தினங்களுக்குள் தமது புதிய திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பார். (உ)

## 'குறுகிய மூலதனத்தில் உற்பத்தியைப் பெருக்க வேண்டும்'

### விவசாயிகளுக்கு ஆலோசனை

நல்லூர், ஞாயிறு

'விவசாயிகள் பல்லினபயிர்ச் செய்கையை மேற்கொளவதன் மூலம் நம்நாட்டின் உணவுஉற்பத்தியைப் பெருக்கலாம். விவசாயிகள் மூலதனத்தை வீணக்காமல் குறுகிய மூலதனத்தில் தமது முயற்சித் திறனல் விவசாய உற்பத்தியைப் பெருக்க வழிமுறைகளைக்கையாளவேண்டும். விவசாயத் துறையில் ஞானபாஸ்கரோதய சங்கம் விவசாயஅறிவுப்போட்டி, விவசாயக் கருத்தரங்குகள் நடத்துவதன்மூலம் சிறந்த சேவை செய்துவருகிறது' யாழ். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தரான திரு. சிவ. முத்துலிங்கம் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயசங்கத்தின் 57-வது ஆண்டு விழாவை யொட்டி நடைபெற்ற விவசாயக்கருத்தரங்கிற்குத் தலைமை வகித்துப்பேசுகையில் கூறினர்.

கொழும்பு சி. ஐ. ஏ. எஸ். லிமிட்டைச் சேர்ந்த திரு. எட் வேட் இரத்தினம் உரையாற்றுகையில் 'விவசாயிகள் விவசாய மருந்துகளைக் கலக்கும்போதும் அவற்றை விசிறும்போதும் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். விவசாயிகள் பங்கசு நாசினிகளையும், கிருமி நாசினிகளையும் நன்குகக் கலக்காமல் தனித்தனியாக விவசாய ஆலோசகர்களின் சிபார்சுக்கமைய விசிறுதல் வேண்டும்'

யாழ்ப்பாணம் ரோறு லிமிட்டட்டைச் சேர்ந்த திரு. கே. பொன்னையா பேசுகையில், 'எந்த விவசாய மருந்து வகைகளையும் விவசாயிகள் பாவிக்குமுன்பு அவைபற்றிய சுற்றுநிருபங்களை நன்கு வாசித்து அவற்றில் கூறியவாறு மருந்துகளை நீருடன் கலந்து பயிர்களுக்கு விசிறுதல்வேண்டும்' என்ருர்.

'விவசாயிகள் எந்த விவசாய மருந்துகளையும் அதிகாலை 10 மணிக்கு முன்பும் மாலை 3மணிக்குப் பின்பும் விசிறுதல் சிறந்ததாகும். விவசாயிகள் தமது விவசாயப் பயிர்களை நோய்கள் தாக்குமுன்பு மருந்துகளை விசிறுவதன்மூலம் நோய்களிலிருந்து விவசாயப் பயிர்களைக் காப்பாற்றிக்கொள்ளலாம்' என்றும் அவர் கூறினர்.

ஹேகெம் லிமிட்டெட்டைச் சேர்ந்த திரு. க. நா. ஜெயசீலனும் உரையாற்றினர். தொடர்ந்து விவசாய அறிவுப் போட்டி நடைபெற்றது. தமத்தொழிற் தகவற்பிரிவு திரு. கே. அரசரத்தினம் விவசாயம்

(7-ம் பக்கம் பார்க்க)

## வன்முறையிலும், கட்டுப்பாடின்மையிலும் அரசுக்கு நம்பிக்கையில்லை

### சென்னையில் அமைச்சர் பஹுகுண

சென்னை, ஏப். 17

''புதிய அரசாங்கம் 'மிசா' கைதிகளையும், தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர்களையும் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டதால் அரசாங்கத்திற்கு வன்முறையிலும் கட்டுப்பாடின்மையிலும் நம்பிக்கை நம்பிக்கை உண்டு என்று அர்த்தமல்ல'' என்று மத்தியஅமைச்சரும் ஜனநாயகக் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயளாளருமான திரு. பஹுகுண கூறினர்.

சென்னையில் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டி ஒன்றின் போது மேற்கண்டவாறு கூறினர்.

### பிரதமரின் நடவடிக்கையில் திருப்தி

அவர் மேலும் சொன்னதாவது: பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் 'மிசா' கைதிகளையும் தடுப்புக்காவலில் உள்ளோரையும் விடுவிப்பதில் கடந்த மூன்று வாரங்களாக மேற்கொண்டுவரும்நடவடிக்கைகள் பெரும் திருப்தியளிப்பனவாக உள்ளன. தேர்தல் வேளையில் அளித்த வாக்குறுதியை பிரதமர் காப்பாற்றத் தவறவில்லை.

ஜனநாயககாங்கிரஸ் ஜனதாவுடன் ஒத்துழைத்து செயற்பட முன்வந்ததற்குக் காரணம் நாட்டு மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் ஜனதாவும் ஜனநாயக காங்கிரஸும் தோழமைக் கட்சிகள் என்பதில் எந்த சந்தேகத்துக்கும இடம் இருக்க முடியாது''.

''காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்தவர்கள் பலர் உங்கள் கட்சியில்சேர முன்வருவதுபற்றி உங்கள் கருத்து என்ன?'' என்று நிருபர்கள் கேட்டபோது, ''எமது கட்சி பரிசீலனை செய்யாமல் யாரையும் கட்சியில் சேர்க்காது நாய்மையான இலட்சியத்துடன் இயங்குவது எம்கட்சி'' என்ருர் திரு. பஹுகுண.

'எமது அரசாங்கம் மகாத்மா காந்தி, நேரு ஆகியோரின் இலட்சியங்களை செயற்படுத்தும் என்பது உறுதி என்று அவர் மேலும் சொன்ருர்.

### சலுகை நாடி நாம் சேரவில்லை

''எந்த விதமான சலுகையையும் நாடி எமது கட்சி ஜனதா கட்சிக்கு ஒத்துழைப்பு அளிக்கவில்லை'' என்று வலியுறுத்திய திரு. பஹுகுண ''தற்போது பின்தங்கிய நிலையில் உள்ள தமிழ்நாட்டை முன்னேற்றுவதற்கு அரசாங்கம் சகல நடவடிக்கைகளும் எடுக்கும்'' என்று உறுதியளித்தார். (உ)

### மணிவாக்கு

மனிதமுயற்சிக்கும் விதிக்கும் இடையில் இடையறுப் போர் உளது. யாம் முயற்சிப்போம். பயனை இறை வன் கையில் விட்டுவிடுவோம். — காந்திமகான்


# ஈழநாடு
# THE EELANADU


## பனங்கட்டியின் வீழ்ச்சி!

வடக்கில் பனங்கட்டி விற்பனை வீழ்ச்சியடைந்துள்ளது.

சீனியின் விலை குறைக்கப் பட்டதாலும் பங்கீட்டுக்கு வழங்கப்படும் சீனியின் அளவு அதிகரிக்கப்பட் டுள்ளதாலும் பனங்கட்டி விற்பனை வீழ்ச்சியடைந்துள்ளதாம்.

சீனியின்விலை மேலும் குறைக்கப்படுமானால் பனங் கட்டி உற்பத்தியையே நிறுத்தவேண்டிய நிர்ப்பந் தம் ஏற்படலாம்.

உலகச் சந்தையில் சீனி யின் விலை அதிகரித்ததும் இங்கு சீனியின் விலை உயர்ந் தது; சீனிக்குத் தட்டுப் பாடும் ஏற்பட்டது.

சீனித் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்கும் சீனி விலை உயர்விலிருந்து மக்களையும் நாட்டையும் காப்பாற்றுவ தற்கும் பெருமளவில் கைகொடுத்து உதவியது, வடக்கின் பனங்கட்டிதான் என்பதை மறந்து விட முடி யாது.

வடக்கில் கோடிக்கணக் கான பனைமரங்கள் இருந் தும் ஆயிரக்கணக்கானபனை மரங்களிலேயே பதநீர் இறக்கப்படுகிறது.

சீவல் தொழிலாளர் பற் றுக்குறை, பதநீர் இறக்கு வதில் நவீனமுறைகள் இல் லாதது போன்றவைகளே இதற்குக் காரணமாகும்.

ஆனாலும் ஆயிரக்கணக் கான பனைகளில் பதநீர் இறக்கியே நாட்டில் ஏற் பட்ட சீனித்தட்டுப் பாட்டை ஓரளவுக்குச் சமா ளிக்க முடியுமானால் லட்சக் கணக்கான பனைகளிலிருந்து பதநீர் இறக்குவதற்கு வழி கண்டால் நிச்சயம் நாட் டின் முழுத்தேவையையும் பூர்த்தி செய்யமுடியும்.

பனங்கட்டி உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்று குரல் எழுப்பிக்கொண்டி ருக்கும் சமயத்தில் பனங் கட்டி உற்பத்தியையே கைவிடவேண்டிய சந்தர்ப் பம் ஏற்பட்டிருப்பதுகவலைக் குரியதாகும்.

பதநீரிலிருந்துபனங்கட்டி மட்டும் தான் உற்பத்தி செய்ய முடியுமென்பதல்ல! பதநீரிலிருந்து பனஞ்சீனி யும் உற்பத்தி செய்ய முடி யும்.

பலவருடங்களுக்கு முன் வடமராட்சியில்பனஞ்சீனித் தொழிற்சாலையொன்று நிறுவப்பட்டு சீனி உற் பத்தி செய்யப்பட்டது.

அதற்குப் போதிய ஊக்க மளிக்கப்படாததால் அது மூடப்பட்டதுடன் பனஞ் சீனி உற்பத்தியில் ஈடுபடு வதற்கு எவருமே பின்னர் முன்வரவும் முனையவில்லை.

சமீபத்தில் சீனித்தட்டுப் பாடு ஏற்பட்டதும் பனங் கட்டி உற்பத்தியுடன்பனஞ் சீனி உற்பத்தியும் சிலபகுதி களில் மேற்கொள்ளப் பட் டது.

இதுவும்கூட விருத்தி யடைய முடியாமல் போய் விட்டது.

போதிய உதவியும் ஊக்க மும் அளிக்கப்பட்டால் பனங்கட்டி மட்டுமல்ல, நாட்டுக்குத் தேவையான சீனி முழுவதையுமே பதநீரி லிருந்து உற்பத்தி செய்ய முடியும்.

வெளி நாட்டில் அதிக விலைக்குச் சீனியை வாங்கிக் குறைந்த விலைக்கு அரசு கொடுத்துவந்திருக்கிறது. இந்த நஷ்டம் வேறு பொருள்களில் ஈடு செய்யப் படுகிறது.

இதேபோல் வடக்கில் உற்பத்தி செய்யப்படும் பனங்கட்டியையும் அரசாங் கமே கொள்முதல் செய்து மக்களுக்குக் குறைந்த விலை யில் வழங்குவதன்மூலம் ஏற்படும் நஷ்டத்தை வேறு வழிகளில் ஈடு செய்ய முடி யும்.

இதன்மூலம் பனங்கட்டி உற்பத்தியிலீடுபட்டுள்ள தெங்குபனம் தொழில் கூட் டுறவுச் சங்கங்களுக்கு உதவி புரியலாம்.

பனங்கட்டி உற்பத்தியில் பதநீர் இறக்குபவர்கள் முதல் பனங்கட்டி உற்பத்தி செய்பவர்கள், பனங்கட்டி விற்பனையாளர்கள், தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்று பவர்கள் எனப் பெருந் தொகையானோரின் வாழ்க்கை தங்கியிருக்கிறது.

தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச்சங்கங்கள் பல வும் அரசிடம் கடன்பட்டே கட்டிடங்களும் பனங்கட்டி உற்பத்திக்கான உபகரணங் களையும் வாங்கியிருக்கின் றன.

பனங்கட்டி விற்பனையின் மூலம் கிடைக்கும் வருமா னத்தில்தான் இந்தக் கடனையும் திருப்பிச் செலுத்தி வருகின்றன. எனவே பனங்கட்டி உற் பத்தி பாதிக்கப்படுமானால் அரசுக்குத்திருப்பிச்செலுத்த வேண்டிய கடனைக் கட்டு வது கஷ்டமாகிவிடும்.

பனங்கட்டி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பெருந் தொகையான ஊழியரும், தொழிலாளரும், வேலை இழக்கநேரிடும்.

பதநீருக்குப் பதிலாக போதைதரும் பனங்கள் ளின் உற்பத்தியே அதிகரிக்க வழிபிறக்கும்.

இதனால் பனங்கட்டி, பனஞ்சீனி உற்பத்தியைக் குறைப்பதை விடுத்து அவற்றை அதிகரிப்பதற் கான வழிவகைகளைக் காண வேண்டியது அவசியம்.

வடக்கில்தான் பனைகளி ருப்பதால் இதில் பாராமுக மாக இருக்கலாமென்று நினைத்தால் அது நாட்டுக் குத்தான் நஷ்டம் என்பதை சொல்லவேண்டியதில்லை.

ஆசிரியருக்குக் கடிதம்:

### வானொலியில் இரைச்சல்

இலங்கை ஒலிபரப்புக் கூட் டுத்தாபன யாழ்ப்பாண ஒலி பரப்பு நிலையத்திலிருந்து நிகழ் ச்சிகள் ஒலிபரப்பாகும்போது முன்னர் இடையிடையே உஸ்...ஸ்' என்ற சத்தம் இரு ந்து வந்தது. இப்போதும் இச் சத்தத்தை அடிக்கடி கேட்கக் கூடியதாக இருக்கிறது. இத னால் வடபகுதி நேயர்கள் நிக ழ்ச்சிகளைத் தொடர்ந்து ஒழுங் காகக் கேட்க முடியாதிருக் கிறது. உரிய அதிகாரிகள் இது பற்றிக் கவனமெடுப்பார்களா?

வானொலிப்பிரியை
சித்தங்கேணி.

# 'தமிழர் பிரச்னை: சிங்களவர் அறிய முடியாதிருக்கிறது'

## அரசியல்வாதிகளே காரணம்

## என்கிறார் தர்மபால தேரோ

சுழிபுரம், ஞாயிறு

'தமிழ்பேசும்மக்களின் குறை பாடுகளை சிங்களமக்களிற்பலர் நன்கு அறிந்துகொள்ள முடியா மல் இருக்கின்றனர். பிரச்னை களை வளர்த்து லாபம்பெற முனையும் அரசியல்வாதிகளே இதற்குக் காரணமாகும்,என்று தேசிய மதகுருமார்சபை உப செயலாளரும் ஆசிரியருமான வண. கெலியகொட தர்மபால தேரோ கூறினார்.

யாழ்ப்பாணத்தில் மூன்று தினங்கள் தங்கியிருந்து கலந் துரையாடல் நிகழ்ச்சிகளில் இவர் கலந்துகொண்டார்.

சுழிபுரத்தில் தேசிய மதக்குரு மார்சபைச் செயலாளர் சி. பிறைகுடிக்குரு தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் மேலும் பேசும் போதே இவர் மேற்கண்ட கூறினார்.

அவர் தமது உரையில் கூறிய தாவது:

'இந்தநாட்டில் வாழும் இரு பெரும் சமூகங்களுக்கிடையே பரஸ்பரம், நல்லெண்ணத்தை ஏற்படுத்தி சகல பிரச்னைகளை யும் தீர்த்து சகோதரர்களாக வாழ வழிஅமைப்பதே தேசிய மதகுருமார்சபையின் பணியா கும். தமிழ்பேசும் மக்களின் குறைபாடுகளைச் சிங்களமக்கள் பலர் நன்கு தெரிந்துகொள்ள முடியாமல் இருக்கின்றனர். அரசியல்வாதிகளின் செயலே இவற்றுக்குக் காரணமாகும். தமக்கு லாபம்பெறும் நோக் கோடு பிரச்னைகளை இவர்கள் வளர்த்துவருகின்றனர்.எங்கள் நோக்கம் சகலரும் இன்பமாக வாழ்வதே. மதம்மாற்றுவதோ அல்லது அரசியல் வாழ்க்கை நடத்துவதோ அல்ல. நியாய பூர்வமான காரியங்களை நீதி யுடன் கிடைக்கச்செய்ய நாம் என்றும் பாடுபடுவோம்.

'நான் அறிந்தவகையில் யாரையும் பலவந்தமாக இந்த நாட்டில் மதமாற்றம் செய்வ தற்கு எவ்வித அமைப்பும் இல்லை. இன்று சிலர் சில தேவைக்காக மதம்மாறினால் அதை நாம் மதம்மாற்றுவதா கக் கூறமுடியுமா? இதைப் பெரிதுபடுத்தி அரசியல் லாபம் பெறும் அரசியல்வாதிகளே சிந் திக்கவேண்டும். திரு க.வாம தேவன் நன்றியுரை நிகழ்த்தி னார். (உ)

## வண்ணை சிவன் கோவிலில் இன்று

யாழ்ப்பாணம்,திங்கள்

வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வரன் ஆலயத்தில் சூரியகிரணத்தை முன்னிட்டு இன்றுமாலை 4•30 மணிக்கு அர்த்தஜாமப் பூஜை யாகி கோயில் திருக்கதவு அடைத்தலும் நாளைசெவ்வாய் காலை 6மணிக்கு திருவனந்தலும் காலை 7.30 மணிக்கு சித்தாமிர்தபுஷ்க ரணியில் தீர்த்தமும் காலை 8மணிக்கும் காலசந்தி பூஜை யில் விசேடகிரகணப்பூஜையும் இடம் பெறும்.

— ...

## இன்று சூரிய கிரகணம்
### இரவு உபவாசம் இருங்கள்

இன்றுமாலை சூரிய கிரகணம் நிகழ இருக்கிறது. சூரியகிரக ணம் வெற்றுக்கண்ணுக்குப் புலப்படக்கூடிய ஒரு காட்சி யாயினும், வெற்றுக்கண்ணால் பார்ப்பது கண்ணுக்குத் தீமை விளைவிக்குமாகையால் புகை யூட்டப்பெற்ற கண்ணாடி,கறுப் புக்கண்ணாடி முதலியவற்றின் மூலம் பார்ப்பது நன்று.

சூரியகிரகணமானது பார்சுவ கிரகணம், கங்கணகிரகணம், பூரணகிரகணம் என மூவகைப் படும். இன்று நிகழவிருக்கும் கிரகணம் கங்கண சூரியகிர கணமாகும். ஆயினும் இலங் கையில் இது பார்சுவ கிரகண மாகவே (பாதிமட்டும் மறைக் கப்படும்) தோற்றும்.

யாழ்ப்பாணத்தில் மாலை 4.49 மணிக்கும், கொழும்பில் மாலை 4-46 மணிக்கும் கிரக ணம் ஆரம்பமாகும். கிரகணம் முடிவதற்குமுன் சூரியன்அஸ்த மனமடைவதால் மோக்ஷகாலம் தோற்றாது.

கிரகணம் பற்றியபடியேசூரி யன் அஸ்தமனமாவதால் இன் றிரவு உபவாசமிருந்து நாளை சூரிய உதயத்தின்பின் போச னஞ் செய்க. அமாவாசை சிரார்த்தம் நாளை செய்க.

அச்சுவினி,பரணி,கார்த்திகை 1ம் கால், மகம்,உத்தரம் 2ம், 3ம், 4ம் கால்கள், அத்தம்,சித் திரை 1ம், 2ம் கால்கள், மூலம் ஆகிய நட்சத்திரங்களிற் பிறந் தவர்கள் ஸ்நானம், வழிபாடு அவசியம் செய்தல்வேண்டும்.

— சி. சிதம்பரநாதக் குருக்கள்
(திருக்கணித பஞ்சாங்க ஆசிரியர்)

## 'ஐக்கிய இலங்கையை உருவாக்க இதயசுத்தியுடன் உழையுங்கள்'

யாழ்ப்பாணம், திங்.

சிங்கள-தமிழ் நல்லுறவில் ஐக்கியஇலங்கையை உருவாக்கு வதற்கு இதய சுத்தத்துடன் உழைக்கவேண்டுமென்று மானிப்பாய்த்தொகுதி ஐக்கிய தேசியக்கட்சி பிரதம அமைப் பாளர் திரு. அலோசியஸ் கட் சிக்கிளை நிர்வாகிகளைக் கேட் டுக்கொண்டார் கட்டுடை, ஆனைக்கோட்டை, சுந்த ரோடை, உடுவில் முதலியகிளை களுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவின்போது தலைமைதாங்கித் துப் பேசிய திரு. அலோசியஸ் மேலும்பேசுகையில், கட்சியின் இலட்சியங்களைக் கட்டுக்கோப் புடன் கடைப்பிடிக்கவேண்டு மென்றும்கருத்தரங்குகள்மூலம் கொள்கைகளை விளக்கவேண்டு மென்றும் கேட்டுக்கொண் டார். கிளைகளின் புதிய நிர்வா கிகள் வருமாறு:

கட்டுடைக்கிளை: தலைவர்: ஆர். லோகநாதன், உபதலை வர்: ஏ. செல்வரத்தினம்,செய லாளர்: எஸ். குணரத்தினம், துணைச்செயலாளர்: எஸ். பி. அருள்செல்வம், பொருளாளர்: கே. விஸ்வரத்தினம். 8 பேர் நிர்வாக உறுப்பினர்கள்.

ஆனைக்கோட்டைக்கிளை: தலைவர்: வி.இராமன், உபதலை வர்: நா. கு. பாலசிங்கம்,செய லாளர்; தே. செல்வன்,துணைச் செயலாளர்: வீ. பா மணியம், பொருளாளர்:சு. தர்மபாலன். 8 பேர் நிர்வாக உறுப்பினர் கள்.

உடுவில்கிளை: தலைவர்: எஸ். பாலசுப்பிரமணியம், உபதலை வர்: வி. ஜெயராசா, செயலா ளர்: பி. குணரத்தினம்,துணைச் செயலாளர்:எஸ். ஜெயராஜா, பொருளாளர்: ஏ. கமில்ஸ். 8 பேர் நிர்வாக உறுப்பினர் கள்.

சுந்தரோடைக்கிளை: தலைவர்: எஸ். கே. வேல், உபதலைவர்: எஸ். கந்தசாமி, செயலாளர்: ஏ. சர்வானந்தன், துணைச் செயலாளர்: கே. சுந்தரம், பொருளாளர்: எஸ். மகா தேவன். 8 பேர் நிர்வாக உறுப்பினர். (அ)

## அரியாலை யூதாததேயு ஆலய 6-வது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், திங்கள்

அரியாலை புனித யூதாததேயு ஆலய ஆறுவதுஆண்டு நிறைவு விழா இம்மாதம் 21-ம் திகதி மாலை ஆராதனையுடனும் திருப் பலிப் பூசையுடனும் ஆரம்ப மாகிறது.

22-ம் திகதிவெள்ளிக்கிழமை ஆராதனையும் திருப்பலி பூசை யும் 23-ம்திகதி சனிக்கிழமை மாலைஆராதனையும், திருப்பலிப் பூசையும், நற்கருணைப் பவனி யும் 24-ம் திகதி ஞாயிற்றுச் கிழமை காலை திருநாள் திருப் பலிப்பூசையும் திருச்சொருப சுற்றுப்பிரகாரமும் இடம் பெறும்.

விசேஷ அம்சமாக நோயாளி கள் ஆசிர்வதிக்கப்படுவர். காணிக்கைப் பவனியும் இடம் பெறும்.

யாத்திரிகர்களின் வச திக்காக இ. போ. ச. பஸ் சேவைகள் யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இருந்து ஆலயம் வரை செல்ல ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளன. (உ)

## புங்குடுதீவு மேற்கு கூட்டணிக் கிளை

யாழ்ப்பாணம், திங்கள்

ஊர்காவற்றுறை தேசிய அர சுப் பேரவை உறுப்பினர் பண் டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெற்ற தமி ழர் விடுதலைக் கூட்டணி புங் குடுதீவுமேற்குக் கிளைக் கூட்டத் தில் பின்வருவோர் புதிய நிர் வாகிகளாகத் தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர்- பராசசிங்கம், உப தலைவர்- ப. நடராசா, செய லாளர்- ஏ. பசுபதி, துணைச் செயலாளர்- ஐ. திராவிட தாசன், பொருளாளர்- வை. குமாரசாமி, நிர்வாகசபை உறுப்பினர்கள்- ந. பூலோக நாதன், செ. சின்னையா, ஆ. நமசிவாயம், க. தேவதாஸ், ஆ. பொன்னம்பலம், த. சிவ பாதசுந்தரம். (இ)

...

## பின்போடப்பட்டது

சுழிபுரம்,ஞாயிறு

இம்மாதம் 30ம் திகதி நடை பெறவிருந்த விளையாட்டுப் போட்டி அடுத்தமாதம் 7-ம் திகதி நடைபெறவுள்ளதாக வலிமேற்குப்பிரிவு விளையாட்டு அதிகாரி திரு. ஈ. சுப்பிரமணி யம் சகல விளையாட்டுக் கழ கங்களுக்கும் அறிவித்துள்ளார் இப்போட்டியில் பங்குபற்றும் வீரர்கள் பலரும் க. பொ. த உயர் பரீட்சையில் தோற்று வதே இதற்குக் காரணம். போட்டி சுழிபுரம் விக்ரோறி யாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். -(அ)

# "குற்றம் சுமத்துவோர் மாற்று வழியையும் காட்டவேண்டும்"

## ராஜசிங்கத்தின் பதிலுக்கு திருவாதவூரன் பதில்

அன்புள்ள ராஜசிங்கம் அவர்கட்கு;

26-3-77ந் திகதிய எனது பகிரங்க மடலுக்கு 4-4-77ல் பதில் அளித்திருந்தீர்கள். ஓர் 'எழுத்தாளன்' எனக் கூறிக் கொள்ளும் தங்களிடமிருந்து எழுத்தாளனுக்குரிய முறையில் தர்க்கரீதியான - யதார்த்த பூர்வமான பதிலை எதிர்பார்ப்பது இயற்கை. அந்தவகையில் எதிர்பார்த்த எனக்கு ஏமாற்றமே எஞ்சியது. தாங்கள் நேரடியாக எனது கேள்விக்கணைகள் எதனையுமே எதிர்கொள்ளவில்லை. மாறாக சமாளித்து-ஏதேதோ பிரச்னைகளையெல்லாம்இழுத்துநீட்டி எனது கேள்விக்கணைகளிலிருந்து ஒழித்து ஓட முயன்றிருக்கிறீர்கள். தங்கள் நிலை பரிதாபமானதுதான். ஆயினும் 'ஈழநாடு' வாசகர்களுக்கு உண்மையை வெளிச்சம்போட்டுக் காட்ட வேண்டியிருப்பதால் மீண்டும் கணை தொடுக்கவேண்டியநிர்ப்பந்தம் எனக்கு. தங்கள் வழக்கிலே 'தலையிடுதல் மனுதாரராக நுழைந்த எனது வாதம் என்னவென்றால், '1947-48 காலப் பகுதியில் தமிழ்ஈழம் கோராதது தவறு' என்று எமது தலைவர்கள் மீது குற்றம்சுமத்தித் தீர்ப்பளிக்க தங்களுக்கு-இன்று தமிழ்ஈழம் கோரப்படுகின்ற நிலையிலும் அதற்கு எதிராகச் செயல்படுகின்றகாரணத்தால்-'நியாயாதிக்கம்' இல்லைஎன்பதுதான். இதனைத்தான் 26-3-77 கடிதத்தில் சுந்தருக்கு உள்ள தார்மீகபலம் அவரை எதிர்த்து வாதாடுகின்ற தங்களுக்கும் உண்டா? என்ற வார்த்தைகளினால் குறிப்பிட்டேன். 'தார்மீகபலம்' என்ற வார்த்தையின் பொருளை தாங்கள் புரிந்துகொள்ளவில்லை என்பதனைத்தான் தங்கள் கடிதம்எடுத்துக் காட்டியது. 'யோக்கியதை' என்ற தமிழ்ச்சொல்லின் அர்த்தத்தையாவது தாங்கள் புரிந்துகொண்டிருப்பீர்கள் என்றே நம்புகிறேன். எனவே எனது கேள்வியினைத் தங்களுக்குப் புரியக்கூடிய மொழியிலே கூறுவதானால்; அப்படியொரு கேள்வியைக் கேட்பதற்கு தங்களுக்கு யோக்கியதை இல்லை என்பதே எனது வாதமாகும். ஏனென்றால் கேள்விகளை யார்தான் கேட்கமுடியாது-ஆனால் கேள்விகேட்பவர்களது நிலையையும் பொறுத்துத்தான் கேள்விகளுக்கு 'அர்த்தம்' கற்பிக்கப்படுகின்றது. யார்மீதும் யாரும் குற்றம்சுமத்தலாம்-ஆனால் அப்படிக்குற்றம் சுமத்துபவர் அதற்கு சரியான மாற்றுவழியையுமல்லவா காட்டவேண்டும். ஒற்றையாட்சி முறைதான் தமிழினத்தின் இழிநிலைக்குக் காரணமென்றால், அந்த ஒற்றையாட்சிமுறைக்கு எதிராகப் போராடி சரியானதொரு வழியைக் காட்டவேண்டியதுதான் உண்மையான-நியாய உணர்வு படைத்தவர்களது கடமை. அந்தக் கடமையை அவர்சரியாகச் செய்யாத வகையில் அதற்குக் காரணமானவர்களைக் குற்றம் சுமத்தும் உரிமை அவருக்கு இல்லை. புதிய அரசியலமைப்

**விவாதமேடை**

புக்குப்பின்பும்தமிழினம்இரண்டாம்தரப் பிரஜைகளாக வாழ்ந்து வருகின்ற இழிநிலையை எண்ணித் தாங்கள் இரத்தக் கண்ணீர் வடிப்பது உண்மையானால் 1847-48 காலப் பகுதியில் தமிழ்ஈழம் கோராததால் தான் தமிழினம் இன்று இந்த இழிநிலையில் வாடுகின்றது என்பதனைச் சுந்தருக்கு எழுதியது போன்று தாங்கள் நம்புவது உறுதியானால், தாங்கள் இன்று தமிழினத்துக்குக் காட்டவேண்டிய பாதை வேறாக இருந்திருக்கும். 'தலைவர்கள் விட்ட தவறுகளின் தாக்கம் தான் இன்று உங்களை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் சேரவைத்தது' என்பது அர்த்தமற்றவாதம். 'ஐக்கிய இலங்கை'க்காகத் தலைவர்கள் உழைத்தது தவறு எனச் சுட்டிக்காட்டும்தாங்கள்,அவர்களைப்போன்றே அதே ஐக்கிய இலங்கைக் கொள்கையிலே தொங்கிக்கொண்டிருப்பதும்-மற்றவர்களையும் தன்னைப் பிடித்துக்கொண்டு தொங்குமாறு கேட்பதும் எந்தவிதகாரணங்களின் அடிப்படையிலும் நியாயமான ஒன்றாகப்படவில்லை.

அன்றாடச் சம்பவங்களை அரசியல் ரீதியாகச் சுட்டிக்காட்டுவதனை தவறு என அர்த்தம் கற்பித்துள்ளீர்கள். ஆனால் இன்றைய சம்பவங்கள் தான் நாளைய வரலாறு என்பதனை தாங்கள் எண்ணிப்பார்க்க மறந்தது தான் ஆச்சரியமாக இருக்கின்றன. ஐக்கிய இலங்கைக்காக உழைத்த தலைவர்களைத் தாங்கள் இன்று சாடுவது போலத் தான். நாளைய எமது சந்ததி-நாளை எமது பெயரைக் கூறிக் கொண்டு இந்த மண்ணிலே வாழப்போகின்ற குழந்தைகள் இன்றுதமிழ்ஈழத்துக்குவிரோதமாகச் செயற்படுகின்ற அனைவரையும் சாடத்தான் போகின்றது அதுவும் இன்று 'தனிநாடு' கோரிக்கை உலகின் கவனத்தை ஈர்த்து தார்மீக ரீதியாக வலுப்பெற்று வருகின்ற இன்றைய காலகட்டத்திலே, தங்களைப்போன்ற சில தமிழர்கள் அரசினை ஆதரிப்பதனைச் சுட்டிக் காட்டி தமிழர்களில் தமிழ் ஈழத்தை எதிர்ப்பவர்களும் இருக்கின்றார்கள் என்று அரசு பிரசாரம் செய்ய வாய்ப்பளிக்கப்படுகின்றது என்பதனைத் தாங்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

மேலும் அரசியல் நிர்ணய சபையை தமிழ் பா. உ.கள் பகிஷ்கரித்திருக்க வேண்டும் எனக் கூறுகின்றீர்கள். இன்று இப்படிக்கூறும்தாங்கள் அன்று அ.நி.சபை கூட்டப்பட்ட காலப்பகுதியில் இதுபற்றி வாயே திறக்கவில்லையே-ஏன்? தங்கள் கட்சியில் தேர்தலுக்குப்பின் ஒட்டிக்கொண்ட பா. உ. கள் அரசியல் நிர்ணயசபையிலே கலந்துகொண்டதுடன்-தங்கள் வார்த்தைகளில் கூறுவதானல், தமிழர்களை இரண்டாம்தரப் பிரஜைகளாக்கிய புதிய அரசியலமைப்புக்குஆதரவாக அதனை ஏற்றுக் கையெழுத்து மிட்டவர்கள்தானே! தாங்களும் உறுப்பினரானபின்னர் தானே அ. நி. சபையை ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சிகூட்டியது. தாங்களாவது அரசியலமைப்பை வகுத்த தங்கள் கட்சி மூலம் தமிழர் பிரச்னைகளுக்கு சட்டரீதியாகத் தீர்வுகாண முயன்றிருக்கலாமே.

தாங்களும்சேர்ந்துவிட்ட ஒரு பிழையை மற்றவர்கள்மீதுமட்டும் சுமத்திவிட்டு ஏதோ உங்களைத் தூய்மையாகக் காட்ட முயல்வது நாகரிகமான செயலாகப் படவில்லை. ஆனல் அ. நி.சபை விடயத்திலும்சரி தேசியசபை விடயத்திலும்சரி நானும்சரி நான் சார்ந்த இயக்கமும் சரி, நீங்கள் குறிப்பிட்டது போன்று பகிஷ்கரித்து விட்டு 'தனிநாடு' இலட்சியத்துக்காக உழைக்கவேண்டும் என்றகருத்தினைத்தான்கொண்டிருந்தோம். காலத்துக்குக் காலம் அதனை வலியுறுத்தித் தீவிர இயக்கங்களையும் நடத்தினோம். இதனை 'ஈழநாடு' இதழில் வெளிவந்த எனது ஏனைய சில கட்டுரைகளில் படித்திருப்பீர்கள்என்றே நம்புகின்றேன். எனவே கூட்டணியினர் அ.நி. சபையைப் பகிஷ்கரித்திருக்க வேண்டும் எனக்கூறும் தார்மீக உரிமை - புதிய அரசியலமைப்பை உருவாக்கிய கட்சியிலே உறுப்பினராகவிருக்கும் தங்களுக்குக் கிடையாது என்பதனைத் திட்டவட்டமாகக்குறிப்பிட விரும்புகின்றேன்.

மேலும் 1947-48 காலப் பகுதியில் தமிழ்ஈழம் கோராதது தவறு என மனப்பூர்வமாகத் தாங்கள் கூறுவதாக இருந்தால் 1972ல் 'தனிநாடு' கோர ஓர் அரிய சந்தர்ப்பம் இருந்தது. தாங்கள் சுந்தருக்கு குறிப்பிட்டதுபோன்றுஅந்நியர் தொடர்புகள் நீங்கும்போது தமிழ்ஈழம் பிரிந்திருக்கவேண்டுமானல், 1972ல் புதிய அரசியலமைப்பினைத்தொடர்ந்து தான் உண்மையாகவே இலங்கையில் அந்நியர் தொடர்புகள்யாவும்முற்றாக நீங்கின என்பதனைத் தாங்கள் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். அப்படிப் பார்க்கும்போது 1972ல் தமிழ்ஈழம் கோரிக்கை எழுந்தது நியாயமே. ஆனல் தாங்களோ 1972லும் 'ஐக்கிய இலங்கை'க் கொள்கையைத்தான் இறுகத் தழுவிக் கொண்டிருந்தீர்கள். தங்கள் வார்த்தைகளிலே கூறுவதானல், தாங்கள்கூட சம்பவங்களை நிகழவிட்டு அவற்றினை இழுபடுபவர்களாகவே இருந்திருக்கிறீர்கள்.

பழைய அரசியலமைப்பிலிருந்த 29-ம் பிரிவு போன்ற அற்பசொற்ப சலுகைகளும் மறுக்கப்பட்டு, தமிழர்களை இரண்டாந்தரப் பிரசைகளாக்கிய புதிய அரசியலமைப்புக்குஆதரவுதெரிவித்தது தாங்களும் தங்கள்தலைவரும் சகாக்களும் தான் என்பது அனைவரும் அறிந்த உண்மை. இத்தனையுமிருக்கே ஒற்றையாட்சி, தமிழ் ஈழம் போன்ற பிரச்னைகளில் எமது தலைவர்கள்மீது தாங்கள் குற்றங்காண முயற்சிப்பதனைப் பார்த்து நளினமாகச் சிரிப்பதனைத்தவிர நாகரிகமான செயல்எதுவும் எனக்குத் தெரியவில்லை.

இந்தியகாங்கிரஸில் 'ஜின்னா' ஆரம்பத்தில் இருந்ததை நீங்கள் சுதந்திரக்கட்சியில் இருப்பதுடன் ஒப்பிடமுயல்கிறீர்கள். தனது மக்கள் பாதிக்கப்பட்டபோதெல்லாம் கைகட்டி வாய்பேசாது மௌனியாகஇருந்து அவற்றை எல்லாம் ஜின்னா ஆதரித்ததாகவோ, அப்படி அநாகரிகமான செயல்களை இந்தியகாங்கிரஸ் செய்ததாகவோ நான் இதுவரை அறிந்திருக்கவில்லை.

பாகிஸ்தான் என்பது எனது பிணத்திமீதுதான உருவாக்க முடியும் என அண்ணல் காந்தி உரைத்தபோது கூட- பாகிஸ்தான் என்பது பகற்கனவல்ல உருவாக்கியே தீருவோம் எனச் சூழ் உரைத்த ஜின்னா எங்கே-எமது பிரேதங்களின் மீதுதான் தனிநாட்டை உருவாக்க முடியுமென மதிபார்ந்த அமைச்சர் ஒருவர் பாராளுமன்றத்திலே பகர்ந்ததை கேட்டுக் கொண்டும் அதே கட்சியில் ஒட்டிக்கொண்டிருக்கும் நீங்கள் எங்கே?

(7-ம் பக்கம் பார்க்க)

# பிரிவினையைஎதிர்க்கும்போது புதியகட்சிஎதற்கு?

[விவாதமேடையில் புதிதாக ஒரு அன்பர் புதிய பிரச்னையொன்றைக் கிளப்பியிருக்கிறார். வட்டுக்கோட்டை எம் பி. திரு. தியாகராஜா சமீபத்தில் தமது தொகுதியில் நடந்த ஒரு கூட்டத்தில் தெரிவித்த கருத்துக்கும் அவர் புதிதாக தமிழ் சோஷலிச முன்னணியொன்றை ஆரம்பிக்கவிருப்பதாகவும் அறிவித்திருந்ததையும் வைத்து புதிய அன்பர் அவருக்கு எழுதிய கடிதம் இன்று மேடையில் இடம் பெறுகிறது. மாறுபட்ட கருத்துக்களுக்கு இந்த மேடையில் இடமுண்டு; தனிப்பட்ட தாக்குதல்களுக்கு இடமில்லை. திரு. கே. ரி. இராஜசிங்கத்துக்குப் பதில் தருகிறார் திருவாதவூரன். சுவையான விவாதம். விவாதமேடை பற்றிய வாசகநேயர்களின் சுருக்கமான அபிப்பிராயத்தையும் வரவேற்கிறோம். —ஆசிரியர்.]

அன்புள்ள திரு. ஆ. தியாகராசருக்கு:

சென்ற 10-4-77 ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டையிலுள்ள மாவடிச் சந்தியில் அமைந்த தியாகி சுந்தசாமி அரங்கில் திருவாளர் ஆ. சங்கரப்பிள்ளை சமாதானநீதவான் தலைமையில் நடைபெற்ற தேர்தல்பிரசாரக்கூட்டத்தில் தாங்கள் கூறியுள்ள கருத்துக்கள் ஈழநாடு பிரசுரத்தின் வாயிலாக எனது கவனத்தை மட்டுமல்ல இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் கவனத்தையே. ஈர்த்திருக்குமென்பதை நான் சொல்லவேண்டிய அவசியமோ தேவையோ இருக்காது. எனவே, அதை விடுத்து விடயத்திற்கு வருகின்றேன்.

நீங்கள் இன்றுவரை இணைந்துள்ள கட்சியைவிட்டு விலகிப் பிறிதோர் கட்சியை அமைக்க வேண்டியதேயில்லையென்று நான் மட்டுமல்ல இந் நாட்டில் வாழும் சகல மக்களும் திட்டவட்டமாகக் கூறுவார்கள்.

காரணம்?

பிரிவினையைச் சிறிதும் விரும்பாத பெரிய மனம்படைத்த தாங்கள் - ஒற்றையாட்சியின் கீழ் உரிமை பெறத் துணிந்துள்ள உத்தம புத்திரரான நீங்கள், ஒன்றிணைந்து வாழ விரும்பும் பண்புகொண்ட கண்ணியசிலர் என்பது வெள்ளிடைமலையாம் என்னத் திகழ்ந்து மிளிர்ந்தொளிர்கையில், இன்றுவரை ஈழங்கண்ட மற்றுந் தலைவர்கள் போலக் குறுகியமனப்பான்மையில் நினைத்து நிற்பதேயாம்.

பெரும்பான்மை மக்களுடன் சேர்ந்தே உரிமைபெறவேண்டுமெனவும் பிரிந்துவாழ ஒரு போதும் எம்மால் இயலாதெனவும் மார் தட்டும் தாங்கள், எதற்காகத் தனித்தொரு கட்சியை - இயக்கத்தை- அணியைஆரம்பிக்கவேண்டும்?

ஆவேசப்படாது சற்று நிதானமாகப் பொறுமையைக் கடைப்பிடித்து நடுநிலையில் நின்று சிந்தித்துப் பார்த்து திருப்திகரமான திட்டவட்டப் பதில் கூறுங்கள்.

அறிவாற்றல் நிறை அன்புசால் ஐயா! ஆத்திரப்பட்டு வெறும் வார்த்தைகளைக் கொட்டாது ஒப்புக்கொள்ளத் தகுந்த விளக்கத்துடன் உண்மைப் பதில்கூறுங்கள்.

உண்மையில்பெரும்பான்மையினக் கட்சிகளில், அவர் தம் உள்ளங்களில், உங்களுக்கு நம்பிக்கையிருந்தால், நிச்சயமாக இன்றுவரை நீங்கள் சார்ந்துள்ள கட்சியின் வேட்பாளனுகவே போட்டியிடலாமல்லவா?

நிலை இப்படியிருக்க நீங்களேன் பெரியதொரு திட்டந் தீட்டி புதியதோர் அணியைத் திரட்டவேண்டும்?

நீங்கள் குறிப்பிட்டதுபோல நாம் தனித்து வாழ முற்பட்டால் பொருளாதாரக் கஷ்டம் ஏற்படும் என்பது முற்றிலும் மெய்யாகாது. எமது உற்பத்திப் பொருட்களை இந் நாட்டின் தென்பகுதிக்கு அனுப்பாவிட்டால் எமக்கு மட்டுமல்ல தென்பகுதி வாழ் பெரும்பான்மையினருக்கும் நட்டம் ஏற்படத்தான் செய்யும்.

எமது பொருட்களை அவர்கள் வாங்காதுவிட்டாலும் விடலாம், ஆனல், அதேநேரத்தில் அப் பொருட்களை அவர்கள் எங்காவது வாங்கித் தானகவேண்டும். ஆகவே, அவர்கள் எம்முடைய உற்பத்திப் பொருள்களை வாங்கிக் கொள்ள நாமும் அவர்களுடைய உற்பத்திப் பொருள்களான தேயிலை முதலானவற்றை வாங்கிக்கொள்ளலாம். ஆனல் அதேநேரத்தில் அப் பொருள்களை அவர்கள் எங்காவது வாங்கித்தானகவேண்டும். ஆகவே, அவர்கள் எம்முடைய உற்பத்திப் பொருள்களை வாங்கிக் கொள்ள நாமும் அவர்களுடைய உற்பத்திப்பொருள்களான தேயிலை முதலானவற்றை வாங்கிக்கொள்ளலாம்.

மேற்சொல்லியது சாத்தியமாகாத பட்சத்தில் எத்தனையோ வெளிநாடுகளுக்கு எமது பொருட்களை அனுப்பலாம். இன்று எமது உற்பத்தியில் உள்ளவைகளுக்கு வெளிநாட்டில் கிராக்கி இல்லையென காணும் பட்சத்தில் வெளிநாட்டுச் சந்தையில் விலை போகக்கூடிய பொருள்களை உற்பத்திசெய்வதுடன் எம் தேவையைப் பூர்த்திசெய்யுமுகமாக வெங்காயம் முதலானவைகளை அளவோடு உற்பத்திசெய்யலாம்.

மேலும், எமக்கு வேண்டிய பலவகைப் பொருட்களை நாம் கொள்வனவுசெய்யும் வெளிநாடுகளுடன் எமது உற்பத்திப்பொருட்களையும் கொள்வனவுசெய்யவேண்டுமெனப் பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தங்கள் செய்துகொள்வதன் மூலம் பொருளாதாரத்தைப் பெருக்கி நிலைப்படுத்திக் கொள்ளலாம். இவற்றையெல்லாம் அறிவாற்றல் பொதிந்த ஆசிரியரான தங்களுக்கு நான் எடுத்துச் சொல்லவேண்டிய தேவையில்லை. மேலும், உண்மையாக உறங்கும் ஒருவனை இலகுவில் எழுப்பிவிடலாம். ஆனல் அப்படி நடிப்பவனை எழுப்பிவிட முடியவேமுடியாது.

உங்களைத் திசைதிருப்புவது மிகமிகக் கடினம்என்பது எனக்குத் தெரியாததல்ல. இருந்தும் "அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நெகிழும்'' என்ற முதுமொழிக்க்காப்பத் திரும்பத் திரும்ப எடுத்துக்கூறினல் சரிவரும் என்ற துணிவுடன், உங்கள் முடிவை மாற்றிக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இத்தனைகாலமும் உங்களுக்கு மதிப்பளித்து மற்றைய தமிழ்த் தொகுதிகளைவிட உங்கள் தொகுதிக்குக் கூடுதலான நிதியுதவிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடுவதுதான் முறையாகும்.

**வி. வே. நடராசா.**
மேலைப்புலோலி.

### இந்தியாவின் புதிய அரசு

# அண்டை நாடுகளுடன் நட்பை வளர்க்கவே விரும்புகிறது

## நாடுதிரும்பிய அமைச்சர் பீலிக்ஸ் தகவல்

கொழும்பு, ஞாயிறு

''பாரதத்தின் புதிய பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் வெளிநாட்டமைச்சர் திரு. வாஜ்பாய், உள்துறை அமைச்சர். திரு. சரண்சிங் ஆகியோரைச் சந்தித்து நான் உரையாடிதன் மூலம் பாரதம்இலங்கை உட்பட அண்டை நாடுகளுடன் நட்புறவை மேன்மேலும் வளர்த்துக்கொள்ள விரும்புகிறது என்பதனைப் புரிந்து கொண்டேன்'' என்று புதுடில்லியில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் இணைப்புப் பணியகக் கூட்டத்தில் இலங்கையின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டபின் நேற்று நாடு திரும்பிய நிதி, கூட்டுவுத்துறை அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயகா கூறினர்.

அமைச்சர் மேலும் சொன்னதாவது: பாரதத்தின் வெளிநாட்டுக் கொள்கையிலும் எதுவித மாற்றமும் கொண்டு வரப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டது. நமது இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு வலுப்படுவதற்கு வழி கோலியது முன்னாள் பிரதமர்களான லால்பகதூர் சாஸ்திரி, திருமதி இந்திரா காந்தி ஆகியோருடன் நமது பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா கொண்டிருந்த நெருங்கிய நட்புறவுதான்.

அடுத்தாண்டு பெல்கிரேட்டில் அணிசேரா நாடுகளின் அமைச்சர்கள் மட்ட மாநாடு ஒன்று நடைபெறும்.

ஹவானவில் நடைபெறவிருக்கும் அணிசேரா நாடுகளின் அடுத்த உச்சி மாநாட்டிற்கு முன்னர் இணைப்புப்பணியகம் கொழும்பிலும் ஒரு தடவை கூடும் எனஎதிர்பார்க்கப்படுகிறது.

### கருத்து வேறுபாடு எழவில்லை

இந்து சமுத்திர சமாதானப் பிராந்திய விவகாரம் குறித்தும் டில்லியில் நடைபெற்ற பணியகக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் மத்தியில் கருத்து வேறுபாடு எதுவும் எழவில்லை. அணிசேரா நாடுகள் மத்தியிலான நட்புறவு மேன்மேலும் வளரவேண்டும் என்றும் உலக சமாதானத்திற்காக அணிசேரா நாடுகள் பரந்த மனப்பான்மையுடன் செயற்பட வேண்டும் என்றும் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது''

''இக்கூட்டத்தில் கொழும்பில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டின் போது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் பெறுபேறுகள் குறித்தும் ஆராயப்பட்டது'' என்றும் திரு. பீலிக்ஸ் தெரிவித்தார்.

### இந்திரா, சவானையும் சந்தித்தேன்

''நான் காங்கிரஸ் கட்சியின் முன்னள் மத்திய அமைச்சர் திரு வை. பி. சவானையும், திருமதி இந்திராகாந்தியையும் சந்தித்து உரையாடினேன்'' என்றும் திரு. பண்டாரநாயகா சொன்னர். (உ)

### வட்டு எம். பி. நடவடிக்கை

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் கிராமசபைப் பகுதியில் இதுவரை மின்சாரம் கிடைக்காதவட்டாரங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்ககளை வட்டுக்கோட்டைத்தொகுதி தேசியபேரவை உறுப்பினர் திரு. ஆ. தியாகராசா மேற்கொண்டுள்ளார்.

புதிய திட்டங்கள் மூலம்சுழிபுரம் கிராம சபையினர் மின்சாரம் வழங்க முடியாது போனல், ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களையும் சேர்த்து இலங்கை மின்சாரச் சபையினரிடம் ஒப்படைக்குமாறும், அல்லது விசேட நன்கொடைப் பணமூலம் புதிய திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். வடக்கம்பரை காலையடி காளுவன் ருத்தலடி சுழிபுரம் கிழக்கு சந்தை வீதி ஆகிய இடங்களுக்கு விரைவாக மின்சாரம் வழங்க வேண்டும் என சுழிபுரம் கிராமசபை விசேட ஆணையாளரை திரு. ஆ. தியாகராசா எம்.பி. கோரியுள்ளார். (உ)

### அம்பாறை மாவட்டத்தில்

# தனியார்காணிகளை அரசு சுவீகரித்து சிங்கள மக்களுக்கு விநியோகம்

## பிரதமருடன் கூட்டணி பேச்சு நடத்தும்

யாழ்ப்பாணம், திங்கள்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தனியார் காணிகள் அரசாங்கத்தினுல் சுவிகரிக்கப்பட்டு சிங்களமக்களுக்கு விநியோகம் செய்யப்படுவது தொடர்பாக பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்த தமிழர் விடுதலைக் கூட்டணி தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் யாழ். தமிழர் விடுதலைக் கூட்டணி கூட்டணி தலைமைச் செயலத்தில் நடைபெற்ற நடவடிக்கைக்குழுக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில், (அ)அலிஓாவெளி, களிமடுக்கண்டம், நிலாத்துவெட்டை, அம்பலத்துறை ஆகிய இடங்களில் தனியாருக்குச் சொந்தமான விவசாயக் காணிகளை சுவீகரித்து சிங்கள மக்களுக்கு கொடுப்பதுபற்றி, பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கென்று குழுவொன்று நியமிக்கப்பட்டது. இக்குழுவில் திருவாளர்கள் ப. நேமிநாதன், அ. தங்கத்துரை, கே. துரைரத்தினம். எஸ். இராசதுரை ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

அடுத்த நடவடிக்கைக்குழுக் கூட்டத்தை மேமாதம் 4ம் தேதி வவனியாவில் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (க-அ)

### இவர்கள் வெற்றி

நல்லூர், ஞாயிறு

யாழ். கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்க 57 வது ஆண்டு விழாவை யொட்டி நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு:

இளம் விவசாயிகளுக்கான விவசாய அறிவுப்போட்டி; இ. பாக்கியநாதன், பூ. மோகனசந்திரன், இ. ரோகிணி. முதியோர்விவசாய அறிவுபோட்டி வ. பசுபதி, இ. கந்தையா, க. சபாநாயகம்.

பெண்கள்கவிதைப்போட்டி: லோகேஸ்வரி கந்தையா, திருமதி சபாநாயகம், பூங்கோதா நவரெட்ணம், திருமதி செல்லம்மா கந்தையா.

### நியமனம்

யாழ்ப்பாணம், திங்கள்

'மைற்'ஸ்தாபனத்தின் அதிபர் கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா அவர்களை வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் குடியிருப்புப் பொது வசதிகள் சபையின் மக்கள் அங்கத்தினராக நியமனம் செய்திருக்கின்றர். (உ)

## 'பிக்பாக்கெட்' அடித்தவர் பொதுமக்களிடம் சிக்கினர்

யாழ்ப்பாணம், திங்கள்

தென்னிலங்கையில் உள்ள 'பிக்பாக்கெட்'காரர்கள் தமது தொழில்அங்குவெற்றிபெற்றுல்லால், வடக்கு நோக்கி படையெடுக்கிறர்களா? என்ற சந்தேகம் பொலிசாருக்கு ஏற்பட்டுள்ளதாம்.

வடபகுதியில் நடைபெறும் 'பிக்பாக்கெட்' சம்பவங்களில் சிக்குவோரில் பெரும்பாலானோர் தென்னிலங்கை நபர்களாகவே இருக்கிறார்கள் என்று பொலிசார் தெரிவித்தனர்.

சுன்னகம் பஸ் நிலையத்தில் பிக்பாக்கெட் அடித்த ஜஃபார் என்ற தென்னிலங்கை வாலிபர் கடந்தவாரம் பொது மக்களால் கையும் மெய்யுமாகப் பிடித்து பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார். மல்லாகம் நீதவான் திரு. எம். டி. ஜேசுரத்தினம் முன்னிலையில் இவ்வாலிபரை இன்ஸ்பெக்டர் ஜனப் இ. ஏ. ஏ. காதர் ஆஜர் செய்தபோது அவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

பொது மக்களின் ஒத்துழைப்பு இவ்விதம் கிடைத்தால் சுன்னகம் பகுதியில் 'பிக்பாக்கெட்'காரர்களின் கொட்டத்தை அடக்கிவிடலாம் என்று இன்ஸ்பெக்டர் காதர் தெரிவித்தார்.

இதற்குச் சில தினங்களுக்கு முன்னரும் மற்றொரு தென்னிலங்கை வாலிபர் சுன்னகம் பஸ் நிலையத்தில்'பிக்பாக்கெட்' அடித்தபோது பிடிபட்டார். (உ)

### பலிக்கவில்லை

சுழிபுரம், ஞாயிறு

ஒரு இருத்தல் கிளிக்குப் பணம் கொடுத்த பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொண்ட வாலிபர் ஒருவர் தந்திரமாக அச்சீட்டில் மாறுதல் செய்து விற்பனையாளரிடம் பதினைந்து இருத்தல் சீனிபெற முயன்றபோது வகையாகச் சிக்கிக்கொண்டாராம். இச்சம்பவம் வழக்கம்பரையில் உள்ள வர்த்தக நிறுவனம் ஒன்றில் நடந்ததாகக்கூறப்படுகிறது.

கடுமையாக எச்சரித்து வாலிபர் அனுப்பி வைக்கப்பட்டாராம்.



தினசரி 4 காட்சிகள்
ராணி [யாழ்நகர்] ஜெமினி - வைஜந்திமாலா நம்பியார் - வசந்தி நடித்த
தேன் நிலவு

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) ஃ சிவாஜி (இருவேடம்) ஃ ஜெயலலிதா ஃ சுந்தரராஜன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
பாட்டும் பரதமும்
(ஈஸ்ட்மன் கலர்)

11-வது வெற்றி வாரம்!
மனோகரா (யாழ்ப்பாணம்) எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா வீரப்பா - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

REGAL (JAFFNA) Daily at 4-45,7-00&9-30p m. only
For All Good Children From 8 to 80!
"CIRCUS"
(A Full Length Circus Film) (Color)

RIO (Jaffna) Daily 4 Shows
TARZAN IN THE JUNGLE REBELLION
Tarzan's Battle a Madman's Lust for Power When Secret Burried for aThousand Years Turns The Jungle intoA Savage Battle Ground
Extended to day Only due to Patrons Personel Representation.

[இன்று மட்டும்]
ராஜா (யாழ். நகர்) ஜெமினி - சரோஜாதேவி [தினசரி 4 காட்சிகள்]
பணமா பாசமா

19-4 77 முதல் ராஜன் — சாரதா
துலாபாரம்
(தமிழ் - புதிய பிரதி)

வெலிங்டன் ஃ முத்துராமன் ஃ சுஜாதா
[யாழ். நகர்] நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 சிவாஜி,ஜெயலலிதா
[யாழ். நகர்] தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
தெய்வமகன்
22-4-77 முதல்
சொர்க்கத்தில் திருமணம்

தினசரி 4 காட்சிகள்
வின்ஸர் எம். ஜி. ஆர். — பானுமதி
(யாழ். நகர்) நடித்த
மதுரை வீரன் (புதிய பிரதி)

22—4—77 முதல்
சிவாஜி கணேசன் (இரு வேடங்களில்)
நடித்த
மனிதனும் தெய்வமாகலாம்


## குற்றம்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

1940 மார்ச் 20 ல் லாகூர் மாநாட்டிலே "முஸ்லீம்தேசிய இனத்தின் பிரச்னைகள்தீர தனி ஒரு முஸ்லீம் நாடான பாகிஸ்தானை உருவாக்குவதுதான் ஒரே வழி என்ற தீர்மானத்தை தானே முன்மொழிந்த ஜின்னாவுடன், 1976 மே மாதம் வட்டுக்கோட்டையில் "தமிழ் தேசிய இனத்தின் நிலையான வாழ்வைப் பாதுகாப்பதற்கு தமிழ் அரசைப் மீள்வித்து புனரமைப்புச் செய்வது தவிர்க்க முடியாது" எனத் தமிழ் தேசிய இனம் தீர்மானித்த பின்பும் "தனிநாடு கோரிக்கையை கைவிட்டு விட்டு சுதந்திரக்கட்சியில் இணைந்து ஒத்துழைத்தால் தந்தை செல்வா துணைப்பிரதமராகலாம்" எனப் பதவி ஆசைகாட்டும் தங்கள் தலைவரையும் ஒப்பிட்டு அழகு பார்க்கும் தங்களின் செயலை எண்ணி நான் முன்பு எழுதியது போன்று நமட்டுச்சிரிப்பு ஒன்றை நழில்வது தான் நாகரிகமாகப் படுகிறது.

சிங்கத்தை அதன்குகையிலே சந்திப்பதும் ஒரு போராட்ட மரபு என எழுதித் தங்களா போராட்ட உணர்வை வெளிப்படுத்தியிருந்தீர்கள். சிங்கத்தை அதன் குகையிலே "சந்திப்பது" வேறு- 'தரிசிப்பது' வேறு. தாங்களும் தங்கள் தலைவரும் கைகட்டி, வாய் பொத்தி, தலைவணங்கிச் செய்துவருவது எந்தவேலையை என்பது அனைவருக்கும் தெரியும். இனியும் இதுபோன்ற பொருத்தமற்றஉதாரணங்களை எழுத வேண்டாம். நட்புணர்வோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

"கூட்டணியுடன் அரசு பேச்சுவார்த்தை நடாத்தும் இன்றைய சூழ் நிலையில் காட்டமான வார்த்தைகளைப் பாவிக்க விரும்பவில்லை" என எழுதியிருந்தீர்கள். அந்த எழுத்துக்களின் பின்னணியில் 'பேச்சுவார்த்தை' என்பது ஏதோ அரசுடன் இணைந்து ஒத்துழைப்பது என்பது போன்ற அர்த்தத்தைத் தொனிக்க விட்டிருந்தீர்கள். ஆனால் அரசு-கூட்டணியினரின் பேச்சுவார்த்தையின் முடிவு நிச்சயமாக தங்களுக்கு ஏமாற்றத்தைத்தரும் என்பதிலே எனக்குச் சந்தேகமில்லை,

"திருவாதவூரன்"

...

## குறுகிய...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தமான திரைப்படத்தைக் காட்டினர்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் ரோருன்தாபனத்தார் குளிர்பானம் வழங்கினர். (அ)


வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி - ஜெயலலிதா
அன்பைத்தேடி

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன்–நிர்மலா
வீட்டுக்கு வந்த மருமகள்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
கோமாளிகள்


# சண்டிலிப்பாயில்

## காடையர் அட்டகாசம்

சங்கானை, ஞாயிறு

சண்டிலிப்பாயில் காடையர் அட்டகாசம் தலைதூக்கியுள்ளது. இதன்பயனாக கடை ஒன்று சுக்குநூறாக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாகச் சிலமணி நேரம் போக்குவரத்து ஸ்தம்பித்தது.

இன்று சண்டிலிப்பாய் ஐயனார் கோவிலடியில் காரைநகர் வீதி ஏழாம் கட்டைக்கருகாமையில் உள்ள சைக்கிள் கடை உரிமையாளர் சாப்பாட்டுக்காகமதியவேளைபூட்டி விட்டு சென்று திரும்பி வருவதற்கிடையில் அங்கு வந்த கோஷ்டி ஒன்று ஆயுதங்களால் கதவுகளை கொத்தி உடைத்து சுக்கு நூறுக்கி உள்ளிருந்த சைக்கிள்களையும் மற்றும் பொருட்களையும் வீதியில் வீசி எறிந்து பலத்த அட்டகாசம் நடாத்தியது.

இதனால் வீதியில் போக்குவரத்தும் தடைப்பட்டது.

சங்கானையைச் சேர்ந்த செல்லையா துரைசிங்கம் என்பவருடைய கடையே சேதத்திற்குள்ளாகியதாகும். இது பற்றி பொலிசில் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் றியல் மின் தலைமையில் சென்ற பொலிஸ்கோஷ்டி விசாரணையில் ஈடுபட்டுள்ளது. இதுவரை எவரும் கைதாகவில்லை. (அ)

# 'இலக்கிய உலகில் ஆபாசம் ஆகாது'

—இரசிகமணி

யாழ்ப்பாணம், திங்கள்

'வாழ்த்தும் பண்பு தமிழனின் தலையாய பண்பு. கலை இலக்கியம் உன்னதம் அடைய சுவைஞர்கள் ஊக்கமளிக்கபின் நிற்கக்கூடாது' என்று குரும்பசிட்டி சன்மார்க்கசபையில் நடைபெற்ற வேல்அமுதனின் 'வைகறை' சிறுகதை நூல் வெளியீட்டு விழாவுக்குத் தலைமைதாங்கிய கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை குறிப்பிட்டார்.

பாராட்டுரை வழங்கிய இரசிகமணி கனக. செந்திநாதன் "கலை இலக்கிய உலகில் ஆபாசம் தலையெடுப்பது ஆரோக்கியமான சூழ்நிலை அல்ல" எனக்கூறினார். 'ஆபாசம் வியாபாரப் பொருளென்றும் அதனை கலை, இலக்கிய கர்த்தாக்கள் ஆக்கங்களில் புகுத்தித் திசைதிருப்புவது தவிர்க்கப்படவேண்டுமென்றும் திரு. த. சண்முகசுந்தரம் தமது உரையில் குறிப்பிட்டார். மரபோடு ஒட்டிய இக்கதைத்தொகுதி தரமானதென புலவர் மா. பார்வதிநாதசிவம் கூறினார். இரா. கனகரத்தினம், கண்ணன் கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை, பொன். பாலகுமார், அசோகன் ஆகியோரும் பேசினர்.

முதற்பிரதியைக் கலாகேசரி ஆ. தம்பித்துரை வாங்கினார். (அ)

## கி. ச. அறிவிப்பு

வேலணை, ஞாயிறு

வேலணை கிராமசபையின் எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் முதலானவை 1977-ம் ஆண்டிற்குரிய லைசென்ஸ் பெறத் தவறினால் மேற்படி கிராமசபை சட்ட நடவடிக்கை எடுக்கவிருக்கின்றதென அறிவித்துள்ளது. (உ)

## கந்தரநுபூதிப் போட்டி

சுழிபுரம், ஞாயிறு

"நிலையக்குரல்" ஆதரவில் சென்ற ஆண்டு நடத்தியது போல் இவ்வாண்டும் கந்தரநுபூதிப் போட்டி நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சுழிபுரம் பறுளாய் சிவசுப்பிரமணியசுவாமி கோவில் இலட்சார்ச்சனையையொட்டி நடைபெறும் இப்போட்டி பரிசளிப்பு அடுத்த மாதம் நடைபெறும் சங்காபிஷேக தினத்தன்று இடம் பெறும் மனனப் போட்டி, கட்டுரைப் போட்டியென இரு பிரிவுகளாகப் போட்டி நடைபெறும். (அ)

## படகு...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

விபத்தினால் வள்ளத்துக்கு 40,000 ரூபா நஷ்டமும், படகுக்கு 4 லட்சம் ரூபா நஷ்டமும் உண்டாகியிருப்பதாகத் தெரிகிறது.

### மீட்பு வேலையில பொலிசார்

இம்மீட்பு வேலைகளை யாழ். உதவிப் பொலிஸ் சுப்பிரின்டண்ட் சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் விக்ரர் அல்விஸிடமும், சார்ஜன்ட் குகதாசனிடமும்ஒப்படைத்திருந்தார்.

இவ்விருவரும் நெடுந்தீவு ஊடாக ஸ்தலத்துக்குச்சென்று மீட்பு வேலைகளில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர்.

(மட்டு-உ)

## மருந்துத் தட்டுப்பாடு நீங்கியது

பண்டத்தரிப்பு, ஞாயிறு

அளவெட்டி அரசினர் வைத்தியசாலைக்கு மாவட்ட மருந்துக்களஞ்சியப் பகுதியினரால் இவ்வாரம் தேவையானமருந்து வகைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இவ்வைத்தியசாலையில் நீண்டகாலமாக இருந்துவந்த மருந்துத் தட்டுப்பாடு நீங்கியுள்ளது. (அ)

......

## தி மு க.

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

### செயற்குழு அறைகூவல்

தி. மு. க. தலைவர்களின் ராஜினாமாக்களை மறுபரிசிலனை செய்யுமாறும் கருத்துவேறுபாடுகளை கட்சிக்குள் பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்றும் தி. மு. க. சென்னை மாவட்ட செயற்குழு தீர்மானம் ஒன்றின்மூலம் கேட்டுக் கொண்டுள்ளது. (-ஆ)

## செல்வா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: மூளை நரம்பு சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். ஏ. கப்ராலின் எண்ணப்படி, பேராசிரியர் பி. இராமமூர்த்தி மூதறிஞர் செல்வாவை பரிசோதனை செய்தார். டாக்டர் கப்ரால் அளிக்கும் சிகிச்சையில் தாம் முற்றும் முழுதாக அங்கிகரிப்பதாகத் தெரிவித்தார்.

உரியநேரத்தில் நிலைமை அவதானிக்கப்பட்டு தேவையான அறுவைச் சிகிச்சை மேற்கொண்டதையிட்டு தாம் மகிழ்ச்சியடைவதாகவும் சிகிச்சையளிப்பதில் தாமதம் ஏற்பட்டிருக்கும் பட்சத்தில் ஆபத்தாயிருந்திருக்கும் என்றும் டாக்டர் இராமமூர்த்தி தெரிவித்தார். (க-ஆ)

ஈழநாடு
The EELANADU

# படகு-வள்ள விபத்தில்

## நாலரை லட்சம் நஷ்டம்

யாழ்ப்பாணம், திங்கள் நெடுந்தீவில் இருந்து சுமார் இரண்டரை மைல் தொலைவில் நடைபெற்ற கடற்படைப் படகு, மீன்பிடிவள்ள விபத்தில் பல்லாயிரக்கணக்கான ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

மீன்பிடி வள்ளம் கடலில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. கடற்படைப்படகை மீட்பதற்குத் திருகோணமலை கடற்படைப் பாரந்தூக்கியின் உதவி எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிச்சமின்றி மீன் பிடித்துக்கொண்டிருந்த மீன்பிடி வள்ளம் மீது கடற்படை படகு மோதியதனையடுத்து மீன்பிடி வள்ளமும் அடுத்து படகும் மூழ்கியதாகக் கூறப்படுகிறது.

ஆயினும் தெய்வாதீனமாக இவ்விபத்தில் எவருக்கும் உயிராபத்து எதுவும் ஏற்படவில்லை.

(7-ம் பக்கம் பார்க்க)

# கூட்டணியில்சேரமாட்டேன் என்னுடன் சேரட்டும்

## ஸி. சுந்தரலிங்கம் கூறுகிறார்

யாழ்ப்பாணம், திங். 'நான் தமிழர் விடுதலை கூட்டணியில் சேரமாட்டேன். கூட்டணியினர் தான் என்னுடன் வந்து சேரவேண்டும். நான் தான் முதன் முதலில் தனித்தமிழ்நாடு கோரிக்கையை முன்வைத்தேன்'

நல்லூரில் நடந்த தமிழ் ஈழத்தொண்டர் சபை தேர்தல் ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய சபை அமைப்பாளர் திரு. சி. சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. சுந்தரலிங்கம் மேலும் கூறியதாவது;

மாங்கன்றுகள் ஒட்டும் போது, பழைய மரத்தில்தான் புதிய மரத்தின் கிளையை ஒட்டுவார்களேயொழிய புதிய மரத்தில் பழைய மரக்கிளையை ஒட்டுவதில்லை. இதேபோல் தான் 25 வருடத்திற்கு முன்னரே தனித்தமிழ்நாடு பற்றி தெரிவித்தேன். ஆதலால் கூட்டணியினர் என்னிடம்தான் வரவேண்டும்.

தமிழ் ஈழத்தொண்டர் சபை சார்பில், வடக்கில் கிழக்கில் 25 இளைஞர்களை அடுத்த தேர்தலில் நிறுத்தப் போகிறேன். இவர்கள் தொழிலாளர்களாகவும், விவசாயிகளாகவும் இருப்பார்கள். சட்டத்தரணிகள் எவரையும் நிறுத்த மாட்டேன். இவர்களை நிறுத்தினால் கோட்டிலே தான் காலத்தைக் கழிப்பார்கள். தமிழ் நாட்டைப் பற்றிச் சிந்திக்கவும் இவர்களுக்கு நேரம் இருக்காது.

சிறைமீண்ட இளைஞர்களில் ஒருவர் என்னுடன் தொடர்பு கொண்டுள்ளார். அவரை கோப்பாய் தொகுதியில் நிறுத்த முடிவு செய்திருக்கிறேன். அபேட்சகர் தெரிவில் சிறை மீண்ட இளைஞர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும்.

கொழும்பு மேற்கில் நான் ஐக்கிய தேசிய கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ஆகியோரை எதிர்த்துப் போட்டியிடவிருக்கின்றேன்.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் சேர்ந்து உழைக்குமாறு சிலர் வந்து என்னை கேட்டார்கள். நான் முற்றாக மறுத்து விட்டேன். அந்தப் பேச்சுக்கே இடமில்லை.

அபேட்சகர்களை பொது மக்களே தெரிவு செய்வார்கள். எந்த அபேட்சகருக்கு கூடிய ஆதரவு இருக்கிறதோ அவரே போட்டிக்கு நிறுத்தப்படுவார்.

தேர்தல்ஆலோசனை மாநாடு தொடர்ந்து நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. [க-ஆ]

# இரவுக் கிளப் நடனப் பெண் குத்திக் கொலை

கொழும்பு, ஞாயிறு இரவுகிளப் நடனக்காரியொருவர் இன்று அதிகாலை கோலமாகக் குத்திக்கொலை செய்யப்பட்டார். அவரது சடலம் தெமட்டக்கொடையில் அநாதரவாகக் கிடக்கக் காணப்பட்டது.

கொழும்பு நகரிலுள்ள பிரபல இரவுக்கிளப் ஒன்றில் நடனமாடிவிட்டு நிமால் என்பவருடன் இன்று அதிகாலை மூன்றரை மணியளவில் ராணி என்னும் 28 வயதான நடனக்காரி வெளியேவந்ததாகவும் இவர்களது வரவுக்காக டாக்ஸி ஒன்றில் காத்திருந்த ஐந்துபேர் நிமாலைக் குத்திவிட்டு ராணியைக் கடத்திச் சென்றதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

கடத்திச் செல்லப்பட்ட நடனக்காரி குத்திக்கொலை செய்யப்பட்டு தெமட்டக் கொடையில் அவரது சடலம் கிடக்கக் காணப்பட்டது.

அந்தப் பெண் கற்பழிக்கப்பட்டிருக்கலாமென்றும் பொலிசார் கருதுகின்றனர்.

நிமாலுடனுள்ள பழைய தகராறே இக்கொலைக்குக் காரணமாக இருக்கலாமென்றும் சந்தேகிக்கப்படுகிறது.

பொலிஸ் அதிபர் திரு. ஆர் சுந்தரலிங்கத்தின் தலைமையிலான விசேஷ குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸ் கோஷ்டி இதுபற்றிப் புதன் விசாரணை செய்துவருகிறது.

இதுவரை எவரும் கைது கைது செய்யப்படவில்லையாயினும் ஐவரில் ஒருவர் பற்றிய விபரம் தங்களுக்குக்கிடைத்துள்ளதாகவும் விரைவில் ஐவரும் கைதாகலாமென்றும் பொலிசார் தெரிவித்தனர்.

கத்திக்குத்துக்காளான நிமால் என்பவர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (அ)

தமிழ் ஈழத் தொண்டர்சபை

# 4 தொகுதிகளுக்கு அபேட்சகர்கள் தெரிவு

யாழ்ப்பாணம், திங்கள் தமிழ் ஈழத் தொண்டர்சபை நான்குதொகுதிகளுக்கு அபேட்சகர்களைத் தெரிவுசெய்துவிட்டதாகத் தொண்டர்சபை அமைப்பாளர் திரு. சி. சுந்தரலிங்கம் நேற்று நல்லூரில் நடந்த தேர்தல் ஆலோசனை மகாநாட்டில் தெரிவித்தார்.

நல்லூர் செட்டித்தெரு ஒழுங்கையில் 4-ம் இலக்க இல்லத்தில் திரு. சுந்தரலிங்கம் தலைமையில் நடந்த மகாநாட்டில் ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் இளைஞர்கள் கலந்து கொண்டார்கள்.

கிளிநொச்சித் தொகுதியில் திரு. என். எஸ். கே. லட்சுமணனும், கோப்பாய்த் தொகுதியில் திரு. கா. சிவயோகநாதனும், யாழ்ப்பாணத் தொகுதியில் காரைநகரைச் சேர்ந்த டாக்டர் ஏ. தர்மலிங்கமும், அபேட்சகர்களாக நிறுத்தப்படுவார்கள் என்றும் திரு. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

கொழும்பு மேற்கில் தாம் போட்டியிடவிருப்பதை அவர் மீண்டும் உறுதிசெய்தார்.

மற்றும் தொகுதிகளுக்கான விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டுவருவதாகவும் அவர் கூறினார். (க-அ)

# "தொழிலாற்றும் ஸ்தாபனத்தை சொந்தமெனக் கருதவேண்டும்"

சங்கானை, ஞாயிறு ஒரு ஸ்தாபனத்தின் வளர்ச்சி அதில் கடமையாற்றும் தொழிலாளர்களிலேயே தங்கியுள்ளது. அவ்வவ்ஸ்தாபனங்களின் நெறியாளர்குழு, நிர்வாக உத்தியோகத்தர்கள் காலத்திற்குக்காலம் மாறலாம். ஆனல் அங்கு தொழில்புரியும்ஊழியர் நிரந்தரமானவர்கள். எனவே தான் அவர்கள் தாம் தொழில் புரியும் ஸ்தாபனத்தைத் தமது சொந்த உடைமையாகக் கருதிக் கடமையாற்றவேண்டும். அதுவே தமக்கும் தம்மக்களுக்கும் செய்யும் சிறந்த சேவையாகும்.

இவ்வாறு சங்கானை ப. நோ. கூ. சங்கத் தலைவர் சட்டத்தரணி எம். கே. சுப்பிரமணியம் சங்கானை ப. நோ. கூ. சங்க தொழிலாளர் மத்தியில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

புதுவருடத்தை ஒட்டி சங்க ஊழியர்களுக்கு கைவிசேஷம் வழங்கும் வைபவத்திலேயே திரு. சுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினார். மின்தறி ஆலை மண்டபத்தில் இவ்வைபவம் நடைபெற்றது.

நெறியாளர் குழு உறுப்பினர் திரு. பொ. சிவகுரு, பொது முகாமையாளர் திரு. வி. கந்தசாமி, மின்தறிஆலை தொடர்பதிகாரி திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் ஆகியோரும் உரையாற்றினர்.

# கோரிக்கை நிறைவேருவிடில் நேரடி நடவடிக்கை

## மருந்துக் கலவையாளர் அறிவிப்பு

பண்டத்தரிப்பு, ஞாயிறு தங்களது நீண்டகால முக்கிய மூன்று கோரிக்கைகளையும் இந்த மாத முடிவுக்குள் தீர்த்து வைக்காது போனல் கடும் தொழிற் சங்க நடவடிக்கை மேற்கொள்ள நேரிடும் என்று அரசாங்க மருந்து கலவையாளர்கள் (டிஸ்பென்சர்கள்) சங்கம் சுகாதார அமைச்சுக்கு தெரிவித்துள்ளது தங்களது முக்கிய கோரிக்கைகளான சம்பள முரண்பாட்டுக் கமிஷன் சிபார்சுகளை அமுல் நடத்துதல், புதிய மருந்து கலவையாளர்களை நியமனம்செய்தல், மத்திய மருந்துச்சாலைகளில் சாதாரண தொழிலாளர்களை நியமித்தல் ஆகியவை தொடர்பாகச் சுகாதார அமைச்சு இதுவரை அக்கறை எடுக்காது காலம் தாழ்த்தி வருவதாகவும் இம்மாத இறுதிக்குள் இவற்றைத் தீர்த்து வைக்க அமைச்சு தவறினல் வேலை நிறுத்தம் போன்ற நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத்தவிர வேறு வழியில்லை என்றும் மேற்படி சங்க பொதுச் செயலாளர் திரு. எச். ஜீ பொன்சேகா சுகாதார அமைச்சருக்கு அறிவித்துள்ளார். (அ)

# காங்கிரஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எந்தத்தொகுதிகள்

தமிழ்க்காங்கிரஸ் தலைவருடன் தொகுதிபற்றி பேச்சுவார்த்தை நடாத்த திருவாளர்கள் திரு. சிவசிதம்பரம் திரு. திருநாவுக்கரசு, ஆர். விஸ்வநாதன் ஆகியோர் கொழும்பு சென்றுள்ளனர். சுகவீனம் காரணமாக திரு. வி. ஆனந்தசங்கரி செல்லவில்லை.

யாழ்ப்பாணம், நல்லூர் காங்கேசன்துறை, பருத்தித் துறை, உடுப்பிட்டி, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய ஏழு தொகுதிகளை தமிழ்க் காங்கிரஸ் கோரியிருப்பதாகத் தெரியவருகிறது. (க)

உறக்கத்தில் இருந்த

# இளம்பெண்ணின் தங்கச்சங்கிலி கொள்ளை

யாழ்ப்பாணம், திங்கள் இரவுவேளை தமது வீட்டில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த இளம்பெண் ஒருவரின் தங்கச் சங்கலி இனந்தெரியாத நபர் ஒருவரால் அறுத்துச் செல்லப் பட்டதாம்.

புத்தூரில் நடைபெற்ற இச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

வேலன் மகேஸ்வரி என்ற இளம்பெண்ணின் சுமரர் 1500 ரூபா பெறுமதிமிக்க தங்கச் சங்கிலியே இவ்வாறு கொள்ளை அடிக்கப்பட்டுள்ளதாம்.

கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி 'ஜனுப் ஷராப் தீவிர விசாரணை நடத்துகிறார். (விஸ்வ-நி-உ)

# ஹைதரபாத் யாழ். கோஷ்டி இன்று மோதும்

யாழ்ப்பாணம், திங். இந்தியா ஹைதரபாத்விஜய ஹனுமான்கிரிக்கெட் கோஷ்டி சுற்றுப்பயணமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம். வந்துள்ளது. இன்று இக்கோஷ்டி யாழ். தெரிவுக் கோஷ்டியுடன் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் '40 ஒவர்' கிரிக்கெட் போட்டியில் கலந்து கொள்ளும். (ஆ)

# சுயாட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வர் என்று தெரிகிறது.

தமிழர் சுயாட்சிக் கழகத்தின்சார்பில் கழகத் தலைவர் திரு.வ.நவரத்தினம், பொதுச் செயலாளர் திரு.செ.கோமேஸ்வரன், துணைச்செயலாளர் திரு.ந.ஸ்ரீகாந்தா உட்பட ஐந்து பேர் கலந்து கொள்ளவிருக் கின்றனர்.

தமிழரசுக்கட்சியின் நீண்டகாலஉறுப்பினரும் ஊர்காவற்றுறைத் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரமுகருமான திரு.ச.அருமைநாதர் தலைமையிலான தூது கோஷ்டியினர் இந்த இணைப்புநடவடிக்கைக்குப் பாலமாக இருந்து வந்தனர். இப்பேச்சுவார்த்தை சம்பந்தமான அறிவித்தல் கடிதம் நேற்று முன்தினம் தமிழர்கூட்டணி செயலதிபர் திரு.அ.அமிர்தலிங்கத்திடமிருந்து திரு. அருமைநாதருக்கு கிடைத்துள்ளது.

"தமிழ் மக்களின் ஒற்றுமையை பலப்படுத்தும் நோக்குடனும், தமிழினத்தின் நலன் கருதி கூட்டணி எடுத்துக் கொண்ட தனிநாட்டுக் கோரிக்கையை வலுப்படுத்தும் வகையிலும் இப்பேச்சு வார்த்தை நடைபெறுகிறது" என்று தமிழர் கூட்டணியின் பிரமுகர் ஒருவர் இதுபற்றி கருத்துதெரிவிக்கையில் கூறினார்.

"தமிழர் சுயாட்சிக் கழகத்தின் தனியாட்சிக் கொள்கையையே தமிழர் கூட்டணி இன்று ஏற்று பிரசாரம்செய்து தருவதாலும்' தமிழ் மக்களின் எதிர்கால நலன் கருதி இக் நோக்கமும் வெற்றிபெறவே இப்பேச்சுவார்த்தைக்கு சுயாட்சிக்கழகம் இணக்கம் தெரிவித்துள்ளது" என்று தமிழர் சுயாட்சிக் கழக பிரமுகர் ஒருவர் தெரிவித்தார், (ஆ)


## மரண அறிவித்தல்

### மாரிமுத்து சின்னத்தம்பி (மேசன்)

தொல்புரம் சின்னவர், சின்னவி, சின்னம்மான் என்றழைக்கப்படும் மாரிமுத்து சின்னத்தம்பி (மேசன்) அவர்கள் காலமானர். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 18-4-77 திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும்.

தகவல்: சி. மகேந்திரன்.

5916


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவிதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna; Telegram Eelanadu, Telephone 389. Registered as a Newspaper in SriLanka.